வார இதழ்
# தேசியம்
THESIYAM තේසියම්
www.thesiyamnews.com
REGISTERED AS A NEWS PAPER

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT



No.08, Nallur New Market, Kalviyankadu, Jafna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

மலர் - 03 இதழ் - 32 05.03.2025 - 11.03.2025 வள்ளுவர் ஆண்டு 2054 பக்கங்கள் 12 ஊக்குவிப்பு: 80/=



# புதிய கூட்டுக்கள் பழைய பகைமைகள்?


▶▶08



## 2025 உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பு வேட்புமனுக்கள் மார்ச் 17 முதல் ஏற்பு

மே மாதத்தில் தேர்தல் நடத்தவும் வாய்ப்பு

▶▶03



## உக்ரைனிய போரில் அமெரிக்காவின் இரட்டை முகம் !

▶▶09

## ஜே.வி.பி. ஆட்சியும் மலியும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களும்

▶▶04

## புலிகளுடைய காலத்தில் போதைக்கு இடமில்லை!

ரவிகரன் எம்.பி. சுட்டிக்காட்டு

▶▶03

## தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட 15 அமைப்புகளுக்கு தடை!

விசேட வர்த்தமானி வெளியீடு

▶▶03

வார இதழ் தேசியம்
www.thesiyamnews.com THESIYAM தேசியம்
ஆசிரியர்பீடம்

தொலைபேசி: 94779090015, 0212223190
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com

# மாற்றம் சாதித்தது என்ன?

இலங்கையின் 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் மீதான நாடாளுமன்ற விவாதத் தொடர் நடைபெற்று வருகிறது. மார்ச் இறுதி வாரம் வரையில் இது தொடரவிருக்கிறது. இதற்குள்தான் உள்ளூராட்சித் தேர்தல் எப்போது அறிவிக்கப்படும் என்று தெரியாமல் மக்களும் அரசியல் கட்சிகளும் இருந்து கொண்டிருக்கின்றனர்.

நாட்டில் அதிகரித்துவரும் வன்முறைகளும், கொலைகளும் நாட்டில் சட்டம் ஒழுங்கின் மீது மக்களுக்கு சந்தேகங்களை எழுப்பிவருகின்றன. வெறுமனே மொட்டையாக ஒன்றுக்காக இன்னொன்றைக் காரணங்காட்டுவதும். இன்னொரு தரப்பு மீது குற்றஞ் சுமத்துவதும் அதிகரித்திருக்கிறது. கடந்த மாதம் 24 திகதி திருகோணமலை கிளிவெட்டி பிரதேசத்தில் ஏற்பட்ட வாகன விபத்தில் இன வன்முறையாக மாறுவதற்கான சூழல் ஏற்பட்டது. இருந்தாலும் அது தணிக்கப்பட்டிருக்கிறது.

ஜே.வி.பி. தொடர்பில் பலரும் பலவாறாக குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். இந்த விடயங்களுக்கிடையில்தான் அரசாங்கம் நாட்டை நகர்த்த வேண்டியிருக்கிறது. புதிய அரசாங்கத்தில் முதல் வரவு – செலவுத்திட்டம் மானியங்களையும், நன்கொடைகளையும் வரப்பிரசாதங்களையும் அள்ளி வழங்கும் என்று எல்லோரும் நம்பியிருந்த வேளையில் ஒன்றுமில்லா ஏமாற்றத்தினை அது கொடுத்திருக்கிறது.

நடைபெற்றுவருகின்ற தமிழ் மக்களின் போராட்டம் கடந்த அரசுகளால் தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் எதுவுமில்லை என்று கூறியதை விடவும் மோசமாக அதனைப்பற்றிய பேச்சையே இந்த அரசாங்கம் எடுக்காது நகர்கிறது. 2009 மே 18 உடன் முள்ளிவாய்க்காலில் புதைக்கப்பட்டு மௌனிக்கச் செய்யப்பட்ட ஆயுதப் போராட்டம் வெறுமனே ஒரு பயங்கரவாதமாகப் பார்க்கப்படுவதில் இன்னமும் மாற்றம் ஏற்பட்டுவிடவில்லை.

நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் அமர்வில், இலங்கை அரசாங்கம் தம்முடைய ஏற்றுக்கொள்ளா நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு வெளிநாட்டமைச்சர் உள்ளிட்ட அணியினர் பயணமாகியிருக்கின்றனர். தமிழ்த் தரப்பினர் கோரிவருகின்ற போர்க்குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதற்கு அரசாங்கம் தடையே போட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் இன்னமும் முடிவுக்கு வந்துவிடவில்லை என்பது தென்பகுதி மக்களின் மனங்களுக்கு முழுமையாகச் சென்று சேரவில்லை.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்காலத்தில் உள்ளூராட்சித் தேர்தலுக்காக வேட்புமனுக்கள் கோரப்பட்ட போதிலும் பொருளாதார காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டது. அவரிடம் தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் குடைச்சல்கள் எந்தப் பயனையும் தரவில்லை. உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதாகவே இருந்தது. புதிய ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க தெரிவானவுடன் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டாலும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முடியவில்லை. இப்போதுதான் உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் கொண்டுவரப்பட்டு தேர்தல் நடைபெறும் என்பது உறுதியாகியிருக்கிறது.

நாட்டு மக்களின் அடிப்படையான பிரச்சினைகளை தேர்தல் கோசமாகக் கொண்டிருந்த தேசிய மக்கள் சக்தி இதுவரையில் அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பது போன்றே காணப்படுகிறது. பொருட்களின் விலைகளில் மாற்றமில்லை. அரச உத்தியோகத்தர்களின் சம்பளம் அதிகரிப்பதாக ஒரு மாயைகளைக் காண்பித்து ஏமாற்று வேலை ஒன்று நடைபெற்றிருக்கிறது. தொழிற்சங்கங்கள் போராட்டங்களுக்கான முஸ்தீபுகளில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில் நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சித் தேர்தல் கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் வீசிய அநுர அலையின் தாக்கத்திற்கு உட்படாது. ஏனெனில் அநுர அலையின் தாக்கம் தணிந்துகொண்டிருக்கிறது.

நாட்டில் அமைதியின்மை பிரச்சினையானது மக்களிடம் உருவாகிவருகின்ற அரச எதிர்ப்பு மனோநிலையையும், ஏமாற்ற மனோநிலையையும் திசை திருப்புவதற்காகவே ஏற்படுத்தப்பட்டிருக்கலாம் என்கிற வகையிலான கருத்துக்கள் வெளிவருகின்றன. அமைதியின்மையினை பல குழுக்கள் மேற்கொண்டு வருவதாகப் பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவித்திருந்தார்.

அந்தவகையில்தான், மக்களின் அடிப்படைப்பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கின்ற செயற்பாட்டில் அரசாங்கம் ஈடுபட வேண்டும் என்பது முதன்மை பெறுகிறது. ஜனாதிபதி மாற்றத்தில் தொடங்கிய ஆட்சி மாற்றம் மக்களுக்கு எதனையும் வழங்காது பழைய ஆட்சியையே தொடர்வதாக இருந்தால் எதற்காக மாற்றத்திற்கு வாக்களித்தோம் என்கிற மனோநிலையே மக்களுக்கு உருவாகும். இந்த மனோ நிலையில் இருந்து மக்களை மீட்டெடுப்பதே இப்போதைக்கு அரசாங்கத்தின் வேலையாக இருக்க வேண்டும்.

பெரியளவில் வரப்பிரசாதங்களை அள்ளி வீசாவிட்டாலும், ஒரளவுக்கேனும் எவற்றையாவது தெளித்து சீர்செய்ய அரசு முயலுமா என்பதை சில காலங்கள் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# தேசியப் பார்வை

பத்திரிகையாளர் திரு கீத் நாயர் மீதான தாக்குதல் தொடர்பில் அண்மையில் கைது செய்யப்பட்ட இராணுவ புலனாய் வாளர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ரூபா 3.5 பில்லியன் VAT வரி மோசடிக்காக சிறை தண்டனை அனுபவித்து வந்த அர்ஜீன் அலோசியஸ் நன் நடத்தை காரணமாக வெறும் 4 மாத காலத்தில் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

இஸ்லாத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டதற்காக சிறையில் அடைக்கப்பட்டிருந்த பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் பிணையில் விடுவிக்கபட்டு உள்ளார்.

ரூபா 34 மில்லியன் பெறுமதியான நிலமொன்று தொடர்பாக Prevention of Money Laundering Act இன் கீழ் கைது செய்யப்பட்ட யோசித ராஜபக்ச அவர்கள் வெறும் இரு நாட்களில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ரூபா 6.1 மில்லியன் பொது நிதியை தவறாக பயன்படுத்தியதாக கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா வெறும் ஒரு நாளில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

சட்டவிரோத வாகனம் (Illegally assembled lorry) ஒன்று தொடர்பாக கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா வெறும் ஒரு நாளில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ரூபா 183 மில்லியன் மோசடி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு பிரியந்த மாயாதுன்னே கைது செய்யப்பட்ட அன்றே பிணையில் விடுவிக்கப்பட்டார்.

நிதி மோசடி வழக்கொன்றில் சிக்கிய முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் சகோதரர் வெறும் இரு வார காலத்தில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

வாகன மோசடி வழக்கிற்காக கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜான்ஸ்டன் பெர்னாண்டோ ஒரு வார காலத்தில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மறுபுறம் VFS Scam உட்பட பல்வேறு அரச நிதி மோசடிகளோடு நேரடியாக தொடர்புடைய முன்னாள் அமைச்சர் Tiran Alles க்கு STF பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

Tiran Alles இன் நெருக்கிய சகாவான திருமதி ஆயிஷா ஜினசேனா அவர்கள் நீதி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதே போல Tiran Alles இன் மற்றுமொரு கூட்டாளி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இது போதாதென்று தற்போது நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் தேடப்படும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் திரு தேசபந்து தென்னகோன் Tiran Alles இன் வீட்டில் பதுங்கியிருப்பதாக சொல்லப்படுகின்றது.

இதனாலேயே இலங்கை பொலிஸாரால் அவர்களது தங்கள் கட்டமைப்பின் பிரதானி தேசபந்து தென்னகோனை கண்டுபிடிக்க முடியவில்லை.

தேசபந்து தென்னகோன் நீதிமன்றில் சரணடைந்து பிணை பெறும் வரை அவர் Tiran Alles வீட்டில் பதுங்கி இருப்பார் என சொல்லுகின்றார்கள்.

சம நேரத்தில் ஜேவிபி யின் பிரதான நன்கொடையாளரான இலங்கை கிரிக்கொடை (Sri Lanka Cricket) சீறுத்த மோசடி பேர்வழி Shammi Silvat வும் தொடர்ந்து பாதுக்கப்பட்டு வருகின்றார்.

இங்கே Shammi Silva முதல் Tiran Alles வரை மோசடி பேர்வழிகளை பாதுகாத்து கொண்டு ஜேவிபி தொடர்ந்தும் ஊழல் மோசடிகளுக்கு எதிராக வெறும் வாயில் பேசி வருகின்றது.

அதே நேரம் பிணை அடிப்படை உரிமை என்பது புரிந்து கொள்ள கூடியது. குறிப்பாக குற்றம் சாட்டப்பட்ட ஒரு நபர் விசாரணை முடிவடையும் வரை சிறையில் இருக்க வேண் டிய அவசியமில்லை

அதாவது குற்றம்சாட்டப்படுபவர் கோரும் பிணை ஒருநாள் தாமதிக்கப்பட்டாலும், அது அவரது அடிப்படை உரிமையைப் பாதிக்கக்கூடியது என்பதை மறுக்க முடியாது.

ஆனால் பாரதூரமான நிதி மோசடிகளில் ஈடுபட்ட சக்தி மிக்க நபர்கள் வெறும் ஒரு சில நாட்களில் மிக மிக வேகமாக பிணை பெற்று கொள்ளுவது மலைப்பாக உள்ளது.

அநுரகுமார திசாநாயக்க தன் முதலாவது பிரச்சார கூட்டத்தில் திரு அர்ஜுன் அலோசியஸ் மோசடி செய்த ரூபா 3.5 பில்லியனை மீள திறைசேரிக்கு பெற்றுகொடுப்பதாக சவால் விட்டிருந்தார்.

ஆனால் திரு அர்ஜீன் அலோசியஸ் வெறும் 4 மாதத்தில் சிறையிலிருந்து விடுவிக்கப்படும் அதிசயம் நடக்கின்றது.

இது போதாதென்று ஆட்கடத்தல் மற்றும் மோசமான தாக்குதலில் ஈடுபட்ட இராணுவ புலனாய்வாளர்களுக்கு வெறும் ஒரே நாளில் பிணை வழங்கப்படுகின்ற உலக சாதனையெல்லாம் நடந்தேறுகின்றது.

ஆனால் இந்த நாட்டில் பல ஆண்டுக் கணக்கில் தமிழ் அரசியல் கைதிகள் எந்த விசாரணைகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

விசேடமாக பிணையற்ற சந்தேகநபர்களாக பலர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

ஆனால் இனவாதம் மற்றும் அடிப்படைவாதம் ஆகியவற்றுக்கு இடமில்லை என வாதிடும் ஜேவிபி தமிழ் அரசியல் கைதிகள் இல்லை என சொல்லுகின்றது கொடுமை.

**வேலைவாய்ப்பு**

யாழில் இயங்கும் அகரவ் பதிப்பகம் நிறுவனத்திற்கு வட மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களில் இருந்தும் விற்பனை முகவர்கள் மற்றும் விற்பனை பிரதிநிதிகள் தேவை.
18 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
(867)
**021 222 3190, 077 909 0015**
(வட்ஸ்அப் மூலமும் தொடர்பு கொள்ளலாம்)

**தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!**

# 2025 உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பு வேட்புமனுக்கள் மார்ச் 17 முதல் ஏற்பு!

## மே மாதத்தில் தேர்தல் நடத்தவும் வாய்ப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் மார்ச் 17 முதல் மார்ச் 20 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

இந்த நிலையில், மே மாதம் முதல் வாரத்தில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்பட வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாட்டிலுள்ள 28 மாநகர சபைகள், 36 நகர சபைகள் மற்றும் 272 பிரதேச சபைகள் என மொத்தமாக 336 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடத்தப்படவுள்ளது.

இவற்றில் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை மாநகர சபை மற்றும் தெஹியத்தக்கண்டிய பிரதேச சபை, மன்னார் மாவட்டத்தில் மன்னார் பிரதேச சபை, கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேச சபை, காலி மாவட்டத்தில் எல்பிட்டிய பிரதேச சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படாது இதனால், இந்த உள்ளூராட்சி மன்றங்கள் தவிர்ந்த 336 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்வதற்கான அறிவிப்பு ஏற்கனவே உள்ளூராட்சி மன்றங்களுக்கு அறிவித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு

▶▶11

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மீண்டும் ஒன்றிணைய வேண்டும்

### ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்புக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி கடிதம்


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கிய நான்கு கட்சிகளும் தமிழினத்தின் நலன் கருதி மீண்டும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கல நாதன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோருக்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் அனுப்பி வைத்த கடி தத்தில் இவ்விடயம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்தக் கடிதத்தில், நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பாக தங்கள் மூவருடனும் கலந்துரையாடியது

▶▶11

# தமிழரசின் பதில் தலைவரின் அழைப்புக்கு சித்தார்த்தன் பதிலடி



எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் இணைந்து செயற்படுவதற்கான உங்கள் விருப்பத்தை தெரியப்படுத்தி நீங்கள் அனுப்பி வைத்த கடிதம் கிடைக்கப் பெற்றேன். இன நலன் குறித்து எங்கள் மத்தியில் கட்டியெழுப்பப்பட வேண்டிய ஒற்றுமை பற்றி கடிதத்தில் நீங்கள் தெரிவித்துள்ள விடயங்களில் எக் காலத்திலும் நாங்கள் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருப்பவர்கள் அல்ல.

உள்ளூராட்சித் தேர்தலில் சில இடங்களிலாவது ஒன்றாக போட்டியிடுவது பற்றி

▶▶11

# சமஷ்டி தீர்வை நோக்கிய பேச்சுவார்த்தை வேண்டும்!

### கஜேந்திரகுமார் எம்.பி வலியுறுத்து



ஒற்றையாட்சி என்ற அரசியலமைப்பை முற்றுமுழுதாக நிராகரித்து முழுமையான சமஷ்டி தீர்வை நோக்கிய பேச்சுவார்த்தையை முன்னெடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

▶▶11

# வடக்கு மீனவர்கள் சீனாவின் பகடையல்ல!

யாழ். மாவட்ட மீனவர் சம்மேளனம் தெரிவிப்பு

இந்திய அத்துமீறிய இழுவைமடிப் படகுகளால் வடக்கு மீனவர்கள் பாதிக்கப்பட்டு வரும் நிலையில் அதனைப் பயன்படுத்தி இந்திய தேசியப் பாதுகாப்புக்கு சீனா அச்சுறுத்தல் விடும் வகையில் எம்மைப் பயன்படுத்துவதற்கு நாம் இடமளிக்கமாட்டோம் என யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கிராமிய அமைப்புகளின் தலைவர் செல்லத்துரை நற்குணம்

▶▶11

# சட்டவிரோத மீன்பிடியை தடுத்து நிறுத்தினால் மீன்களை ஏற்றுமதி செய்யலாம்

### – சபா குகதாஸ்!

சட்டவிரோத மீன்பிடியை தடுத்து நிறுத்தினால் மீன்களை ஏற்றுமதி செய்யலாம் என வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார். அறிக்கை ஒன்றின் மூலம் குறித்த விடயத்தை அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்

கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துனெத்தியின் ஊடக அறிக்கையில் .லங்கையின் பொருளாதாரசரிவில் எதிர்காலத்தில் மீன்களும் இறக்குமதி செய்கின்ற நிலைமை ஏற்படும் எனவும் ஏற்றுமதி செய்யப்படும் மீன்களின் தரத்திலும் குறைபாடு இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

▶▶11

# புலிகளுடைய காலத்தில் போதைக்கு இடமில்லை!

ரவிகரன் எம்.பி. சுட்டிக்காட்டு

தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் போதைப் பொருள் ஊடுருவல்கள் இருக்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் இன்று அனைத்துப் பகுதிகளிலும் தற்போது போதைப்பொருள் பாவனை தலைவிரித்தாடுகின்றது. அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனையாலும், போதைப்பொருள் ஊடுருவல்களாலும் நாடு முழுவதும் தள்ளாடு

▶▶10

# தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட 15 அமைப்புகளுக்கு தடை!

### விசேட வர்த்தமானி வெளியீடு

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உள்ளிட்ட 15 அமைப்புகளை தடை செய்யப்பட்ட அமைப்பாக அறிவித்து பாதுகாப்பு அமைச்சினால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சம்பத் துய்யகொன்தாவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் தொழிற்படுகின்ற தமிழீழ விடுதலை புலிகள் அமைப்புடன் தொடர்புடைய குழுக்களிடமிருந்து பெறப்படுகின்ற உதவியுடன் அந்த அமைப்பை மீள் உருவாக்குவதற்கான எத்தனிப்புக்கள் அவதானிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்துடன் தொடர்புபட்ட செயற்பாடுகள் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளித்த குற்றச்சாட்டில் குறித்த அமைப்புகளை தடை செய்யப்பட்ட அமைப்புக்களாக

▶▶11




## யாழ். மாநகரசபையால் பாதிக்கப்பட்ட இளைஞனுக்கு உதவித் தொகை

யாழில் வீதியோரத்தில் பழக்கடை நடத்தி வந்த இளைஞனிடம் யாழ். மாநகர சபை வரி அறவீட்டு உத்தியோகத்தர்கள் அடாவடியில் ஈடுபட்டு, இளைஞனின் வியாபாரத்தை இடை நிறுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞனுக்கு ஒரு இலட்சம் ரூபா உதவித் தொகை வழங்கிவைக்கப்பட்டது.

லஷ்மிகா அறக்கட்டளையின்

▶▶09




## வனமெல்லாம் புதிர் நூல் அறிமுக நிகழ்வு

2024ஆம் ஆண்டு சிறந்த அறிவியல் புனைகதைக்கான சாஹித்திய மண்டலப் பரிசு பெற்ற, ஜனகா நீக்கிலாஸ் எழுதிய 'வனமெல்லாம் புதிர்' நூலின் அறிமுக நிகழ்வு கடந்த வாரம் கிளிநொச்சியில் நடை

▶▶09



இலங்கை தமிழரசுக் கட்சியின் மறைந்த மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் 31 ஆவது நினைவு நாள் பிரித்தானியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வானது, ஹெரொவ் ஆர்ட்ஸ் சென்டரில் (Harrow Arts Centre) (2024.02.28) நடைபெற்றது.

இதன்போது ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு, அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி உணர்வு ரீதியாக அஞ்சலி செலுத்தப்பட்டது.



# ஜே.வி.பி. ஆட்சியும் மலியும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களும்

நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை. பாதாள குழுக்களிடையே மோதல்கள் வலுப்பெற்றிருந்தாலும் அது பொதுமக்களின் பாதுகாப்புக்கு எவ்விதத்திலும் சிக்கலாக அமையவில்லை என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் கடந்த நான்கு மாதங்களாக ஆங்காங்கே துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் அரங்கேற்றப்பட்டு வருகிறது. கடந்த காலங்களை விட துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் அதிகரித்த வண்ணமேயுள்ளது.

ஆட்சிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தியும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என மார்தட்டிக் கொண்டாலும் இந்த கொடூரத் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் மத்தியில் பாரிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் யுத்தமொன்று இல்லை என்றாலும் தேசிய பாதுகாப்பு மிக மிக முக்கியம் என்பதுடன் அதுவே மக்களின் பாதுகாப்பு மற்றும் நாட்டின் பொருளாதாரத்திலும் தாக்கம் செலுத்துகின்றது.

### 17 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள்

அந்த வகையில் 2025 ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் காரணமாக 6 வயது சிறுமி 9 வயது சிறுவன் உட்பட 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

6 வயது சிறுமி 9 வயது சிறுவன் மற்றும் பாதாள உலகத்தை சேர்ந்த கனேமுல்ல சஞ்சீவ நீதிமன்றத்தில் வைத்தே கொல்லப்பட்டமை போன்ற சம்பவங்கள் பொதுமக்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதை தெட்டத்தெளிவாக வெளிப்படுத்துவதாக மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இந்த வருடம் மாத்திரம் நாட்டில் 17 துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதுடன், இவை திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் கும்பல்களை சேர்ந்தவர்களினால் நடத்தப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு 75 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களும், 18 கத்திக்குத்து அல்லது வாள் வெட்டு சம்பவங்களும்

▶▶10

# செம்மணியில் கண்டறியப்பட்டது மிகப்பெரும் மனிதப் புதைகுழியா?

## விரிவான ஆய்வுக்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம் செம்மணியில் மனித என்புத் தொகுதிகள் மீட்கப்பட்ட பகுதியில், மேலதிக சிதிலங்கள் நிறைந்துள்ளனவா? என்பது தொடர்பில் விரிவான அகழ்வாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் அண்மையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, யாழ். மாவட்டச் சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவநாதன் செம்மணியில் மீட்கப்பட்ட மனிதச் சிதிலங்கள் தொடர்பான அறிக்கையை நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்தார்.

இதுவரை மீட்கப்

▶▶09

வடக்கில் வெள்ளை ஈ வேகமாகப் பரவுகிறது

## தென்னைகள் அழிவடையும் அபாயத்தில் தென்னஞ் செய்கையாளர்கள் அச்சத்தில்

வட மாகாணத்தில் உள்ள தென்னை மரங்களில் வெள்ளை ஈ தாக்கம் வேகமாகப் பரவி வருகிறது. இதனால் ஒட்டுமொத்தத் தென்னை மரங்களும் அழிவடையும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளன.

கடந்த வருடம் வெள்ளை ஈ தாக்கம் வடபகுதியிலுள்ள தென்னை மரங்களில் இருந்தபோதிலும் மாரி மழை காரணமாக வெள்ளை ஈ கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

ஆனால் மழை காலம் முடிவுற்றதும் மீண்டும் வடபகுதியிலுள்ள தென்னை மரங்களில் வெள்ளை ஈ தாக்கம் கடுமையாகவுள்ளது.

இலட்சக்கணக்கான வெள்ளை ஈக்கள் தென்னை ஓலைகளில் தங்கியிருந்து எச்சம் இடுவதனால், தென்னை ஓலைகள் எண்ணெய்த் தன்மையுடன் கூடிய கருமை நிறமாக மாறுகின்றது.

அதேவேளை தென்னை ஓலையின் கீழ்ப் பகுதியில் பங்கசுகளும் பற்றிக்கொள்கின்றன.

இதனால் தென்னை ஓலைகள் காய்ந்து தென்னை மரங்கள் பட்டுப்போகின்ற

▶▶09



எள்ளங்குளத்தில்

## சாந்தனின் துயிலாலயம் அங்குரார்ப்பணம்

எள்ளங்குளம் துயிலுமில்லத்தில் சாந்தனின் புகழுடல் விதைக்கப்பட்ட ,டத்தில் சாந்தனின் குடும்பத்தினரால் உருவாக்கப்பட்டுள்ள 'சாந்தன் துயிலாலயம்' சாந்தனின் தாயாரால் இவ்வாறு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அரசாங்கங்களாலும், அரசியலாலும், சட்டத்தாலும், கடவுள்களாலும் 33 ஆண்டுகள் ஏமாற்றப்பட்ட ஒரு தாயின் ஏமாற்று அடையாளமாக இந்தத் துயிலாலயம் உருவாக்கப்

▶▶09

# விலங்குகளை 5 நிமிடங்களில் கணக்கெடுங்கள் கேலிக்கூத்தான நாமல் கருணாரத்னவின் கருத்து

நாடளாவிய ரீதியில் உள்ள தோட்டங்கள் மற்றும் விவசாய நிலங்களில் சுற்றித்திரியும் குரங்குகள், மயில்கள் மற்றும் மரஅணில்களின் கணக்கெடுப்பை 15 ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் கால்நடை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அதன்படி, சம்பந்தப்பட்ட வீடுகளின் உரிமையாளர்கள் தங்கள் தோட்டங்களில் சுற்றித் திரியும் வனவிலங்குகளை எண்ணி தகவல்களைச் சமர்ப்பிக்கவேண்டும் எனவும் இதற்காக 5 நிமிடங்கள் வழங்கப்படும்

▶▶09

# விகாரைகளால் ஆக்கிரமிக்கப்படும் தமிழர்களின் பாரம்பரிய தாயகம்:

- நவீனன்

போர் மௌனித்து பதினைந்து வருடங்கள் கடந்தும், இந்த ஆக்கிரமிப்பு நிலை இன்னும் தொடர்கிறது என்பதை சர்வதேச நாடுகள் புரிந்து கொள்ளாமல் இருப்பது வேதனை அளிப்பதாக உள்ளது.

தமிழர்களது உணர்வுகளை மதிக்காத சிங்கள அரசுகள் மேற்கொண்ட இனவாத நடவடிக்கைகள் இன்னும் தொடருமாக இருந்தால் தமிழர்களின் தாயக நிலம் விரைவில் முழுமையாக பறிபோகும் அபாயம் உள்ளது)

ஆங்கிலேய காலனியாதிக்கத்தின் பின்னர் இலங்கையில் இனங்களுக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடுகளிற்கான மூல காரணம் மதமோ அன்றில் இனமோ அல்ல. ஆயினும் பெரும்பான்மை இன அடிப்படையிலான கட்சிகளின் அரசியல் அதிகாரப் போட்டிகளின் விளைவே தமிழர் மீதான இனப்படுகொலைக்கு முக்கிய காரணம் ஆகும்.



## தமிழ் இனப்படுகொலை:

1948ஆம் ஆண்டு சிறிலங்காவின் விடுதலைக்குப் பிறகு, சிங்கள தேசிய வாதக் கொள்கைகள் தமிழர்களை புறக்கணித்ததால், அதில் எதிர்ப்பு உருவாகி, இறுதியில் உள்நாட்டுப் போராக, தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலை வெடித்தது.

இதனைவிட பொருளாதார போட்டி மற்றும் அரசியல் ரீதியான போராட்டங்கள் சிங்கள - தமிழ் மக்களின் இடையே கொந்தளிப்பை ஏற்படுத்தி மோதல்களைத் தூண்டின.

அதேவேளை தமிழர் தாயகமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள வளங்கள் உட்பட தமிழ் மக்களது பூர்வீக நிலங்களும் இலங்கையில் உள்ள பெரும்பான்மை இனத்தவர்களால் கைப்பற்றப் பட்டு சூறையாடப்பட்டன.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக கோரமான போர் நடைபெற்று வந்தது. ஆனால் போர் மௌனித்து பதினைந்து வருடங்கள் கடந்தும், இந்த நிலை இன்னும் தொடர்கிறது என்பதை சர்வதேச நாடுகள் புரிந்து கொள்ளாமல் இருப்பது வேதனை அளிப்பதாக உள்ளது.

தமிழர்களது உணர்வுகளை மதிக்காத சிங்கள அரசுகள் மேற்கொண்ட இனவாத நடவடிக்கைகள் தொடருமாக இருந்தால் தமிழர்களின் தாயக நிலம் விரைவில் பறிபோகும் அபாயம் உள்ளது.

கடந்தகால வரலாற்றில் தமிழர்கள் மீதான இனப்படுகொலை மட்டுமன்றி தமிழர்களின் நில அபகரிப்பையும் சிங்கள அரசு தொடர்ந்து செய்து வந்தது.

குறிப்பாக தமிழர்களின் பாரம்பரிய தலைநகரான திருகோணமலையில் ஸ்ரீ மலை நீலியம்மன் கோவிலை தீயிட்டு அழித்துவிட்டு குறித்த கோவில் வளாகத்தில் "பாசன பப்பாத ராஜமஹா விகாரை" என்கிற பௌத்த ஆலயம் ஒன்றை அமைத்து இருக்கிறார்கள்.

அது மாத்திரமன்றி திருகோணமலை முகத்துவாராம் பிரதேசத்தில் குஞ்சுமப்ப பெரியசாமி கோவிலை அழித்து அந்த கோவில் சூழலில் "லங்கா பட்டுன சமுத் திரகிரி" என்கிற பெயரில் விகாரை ஒன்றை கட்டி இருக்கின்றார்கள்.

அத்துடன் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் பூர்வீகமாக வாழ்ந்து வந்த விவசாயம் செய்த 41,000 ஏக்கர் காணிகளை வன இலாகா திணைக்களம் கையகப்படுத்தி உள்ளது. சிறிலங்கா அரசின் துறைமுக அதிகார சபையும் காணிகளை கையகப்படுத்த முனைவதாகவும் குச்சவெளியில் 31 விகாரைகள் கட்டுவதாகவும் கூறப்படுகிறது.

இதனைப் போலவே வடக்கில் தமிழர்களின் தொன்மை மிக்க கோயில்கள் சூழ்ந்த காங்கேசன்துறையில் உள்ள சைவ ஆலய சூழலில் "கெமுனு விகாரை" என்கிற பெயரில் பௌத்த விகாரை ஒன்றை நிறுவி இருக்கிறார்கள்.

மேலும் முல்லைத்தீவு குருந்தூர் மலை ஆதி ஐயனார் கோவில் சூலத்தை உடைத்து வீசிவிட்டு அங்கு "குறுந்தூர் விகாரை" என்கின்ற பெயரில் விகாரை ஒன்றை நிறுவி இருக்கின்றார்கள்.

இதனைப் போலவே முல்லைத்தீவு நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்தில் அத்துமீறி "குருகந்த புராண ராஜ மகா விகாரை" என்கின்ற பேரில் விகாரையொன்றை கட்டியிருக்கின்றார்கள்.

## சிங்கள அரசின் நில ஆக்கிரமிப்பு:

நில ஆக்கிரமிப்பை உறுதி செய்யும் வகையில் வவுனியா வெடுக்கு நாறிமலை சிவன் ஆலய விக்கிரங்களை சேதப்படுத்தி அது "வட்டமான பர்வத விகாரை" என்கின்ற பௌத்த தொல்லியல் நிலம் என உரிமை கோருகின்றார்கள்.





வவுனியா வடக்கில் தமிழர்களின் பூர்வீகக் கிராமமான கச்சல் சமளங்குளத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய விகாரை ஒன்றும் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசின் தொல்பொருள் பகுதி என்ற பெயரில் தொல்பொருள் திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் இந்த விகாரையின் நிர்மாணப் பணிகள் இடம்பெற்றது.

1980 ஆம் ஆண்டுவரை வாழ்ந்து போரின் காரணமாக தமிழர்கள் இடம் பெயர்ந்த நிலையில் இக் கிராமத்தில் தொல்லியல் அடையாளம் எனக் கூறப்பட்டு தமிழர்கள் தடுக்கப்பட்டு வந்தனர்.

அவ்வாறான பகுதியிலேயே இந்த விகாரை அமைக்கப்பட்டு நிறைவுபெற்று திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடகிழக்கு பகுதியை இணைக்கும் மணலாறு பகுதியில் நீண்ட காலமாக நில உரிமையை தமிழர்கள் இழந்து வருகின்றனர். இதன் விளைவாக தென்னவன்மரபடி கந்தசாமி மலை முருகன் ஆலய பூசை வழிபாடுகளை தடை செய்துவிட்டு அது "சங்கமலை விகாரை" க்குரிய நிலம் என உரிமை கோருகின்றார்கள்.

போர்க்காலத்தில் திருகோணமலை 64 ஆம் கட்டை ராஜவந்தான்மலை பிள்ளையார் ஆலயத்தை சிதைத்து விட்டு அங்கு "கொட்டியாராம ஸ்ரீ பத்ர தாது ராஜ மகா விகாரை" என்கின்ற பெயரில் விகாரையொன்றை கட்டியிருக்கின்றார்கள்.

திருகோணமலை சூடைக்குடா மலை குன்றத்தூர் முருகன் ஆலயத்தை அழித்து அங்கும் விகாரையொன்றை கட்டியிருக்கின்றார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் குசலமலை சைவ குமரன் ஆலயத்தின் பாரம்பரிய முன்கதவு, மூலஸ்தான விக்கிரம் என்பவற்றை அடித்து நொருக்கியிருக்கின்றார்கள்.



நீண்ட காலமாக தமிழர் பாரம்பரியத்தை அழித்த சிங்கள அரசுகள், பல நூறு விகாரைகளை கட்டிய சிங்கள ஆக்கிரமிப்பாளர்கள், இது போதாதென்று தையிட்டியில் திஸ்ஸ விகாரையை உருவாக்கி கட்டி எழுப்பி விட்டனர்.

இந்த இடத்தில் விகாரை அடிக்கல் நாட்டப்பட்டபோது அதிகாரத்திலிருந்த ஆட்சியாளர்களின் பங்காளியாக ஜேவிபி கட்சி இருந்ததை கூட பலரும் மறந்து விட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் சட்டவிரோதமாக சிங்கள இராணுவத்தினரால் தமிழரின் பூர்வீக நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள புத்தவிகாரையை நீக்க கோரி தாயகம் எங்கும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

தமிழ் மக்களின் தாயக நிலப்பரப்பான யாழ்ப்பாணம் - தையிட்டியில் தனியாருக்குச் சொந்தமான காணியில் சட்டவிரோதமாக சிங்கள ராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தாயகத்தில் மக்களால் முன்னெடுக்கப்படும் தொடர்ச்சியான போராட்டங்களுக்கு தார்மீக ஆதரவை உலக நாடுகளுக்குத் தெரிவிக்கும் வகையில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டங்கள் புலம்பெயர் தேசங்களிலும் நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | 3 | ✦ | 4 | 5 |
| | ✦ | ✦ | 6 | | 7 | ✦ | |
| 8 | | 9 | | ✦ | 10 | 11 | |
| | ✦ | 12 | | | ✦ | | ✦ |
| 13 | | | | ✦ | 14 | | 15 |
| ✦ | ✦ | | | 16 | | ✦ | |
| 17 | 18 | ✦ | 19 | ✦ | 20 | 21 | |
| 22 | | ✦ | 23 | | ✦ | | ✦ |

## குறுக்கெழுத்துப் போட்டி – 01

### இடமிருந்து வலம்

1. உரிய காலப்பகுதியில் பெய்வது.
4. மது மயக்கம். திரும்பி.
6. முட்டாள் தனத்துக்கு உதாரணமாகக் கூறப்படும் பறவை யொன்று. குழம்பி.
8. இறக்கும் நிலையில் உள்ளவனுக்கு துணை இதுதானாம். குழம்பி
10. அப்பாவித்தனமானவரை குறிக்கும். குழம்பி
12. பிரமாணம் என்னும் பொருளை தரும்.
13. இதற்கும் மை தீட்டி அழகுபடுத்துவார்கள்.
14. புலமை என்றும் சொல்லலாம்.
16. நீர்நிலை ஒன்றையும் குறிக்கும்.
17. பொருட்கள் வாங்கும் இடத்தையும் குறிக்கும்.
20. உலகுக்கு ஒளி தருவது. திரும்பி.
22. குளிரையும் குறிக்கும். திரும்பி.
23. இசையுடன் தொடர்புடையது. திரும்பி.

### மேலிருந்து கீழ்

1. நாற்குணங்களில் ஒன்று.
2. உரலுக்கு ஒரு பக்கமும் இதற்கு இரண்டு பக்கமும் இடி என்பார்கள்.
3. முக்கனிகளில் ஒன்று. தலைகீழ்.
5. உலக நடப்பையும் குறிக்கும்.
7. சிறிய இதுவே பெருவெள்ளம் ஆகிறது.
9. மிக பலவீன நிலை. குழம்பி.
11. எடுத்த காரியத்தில் அடைய விரும்புவது.
14. கௌரவத்துக்கு உரியவர்.
15. இரக்கத்தைக் குறிக்கும். தலைகீழ்.
17. பழம் இதனை குறிக்கும்.
18. தம்பி உடையான் இதற்கு அஞ்சானாம். தலைகீழ்.
19. உடலில் அடிபட்டாலும் ஏற்படும்.
21. மழை காலத்தை குறிக்கும். தலைகீழ்.



எஸ்.தக்ஷிவ்,
தரம் 03, கோப்பாய்



எம்.அஜிஷ்,
தரம் 03 திருகோணமலை

தம்பி, தங்கையரே,
உங்கள் சித்திரங்களும் இப் பகுதியில் பிரசுரமாக வேண்டுமானால்,
உங்கள் ஆக்கங்களை எமது வட்ஸப் இலக்கத்துக்கு அனுப்பி வைக்கலாம்.
எமது வட்ஸப் இலக்கம்:
+94779090015



சி.க்ருஜன்,
தரம் 06, கொழும்பு

சரியான பதில்களை தபால் அட்டையில் ஒட்டி எமக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி
இல.12/1 செங்குந்த அங்காடி,
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு யாழ்ப்பாணம்

முதலாம் பரிசு – 2000
இரண்டாம் பரிசு – 1500
மூன்றாம் பரிசு – 1000



கே.சோபிதா,
தரம் 05, அரியாலை



# அம்மா சொல் கேள்!

செழிப்பான ஒரு புல்வெளியில் ஆடுகள் மேய்ந்துகொண்டிருந்தன. அவற்றை மேய்த்துக்கொண்டு வந்தவன், மரத்தடியில் உட்கார்ந்து கண் மூடி, புல்லாங்குழல் வாசித்துக்கொண்டிருந்தான்.

புல்வெளியைச் சுற்றி வேலி போடப்பட்டிருந்தது. அதன் அருகே, ஓர் ஆட்டுக் குட்டி மேய்ந்து கொண்டிருந்தது.

வேலிக்கு வெளிப்பக்கம் இருந்த ஓநாய் ஒன்று ஆட்டுக் குட்டியைப் பார்த்தது.

வேலிக்குள் முகத்தை நுழைத்துக்கொண்டு, ஓநாய் எதையோ பார்ப்பது போல பாசாங்கு செய்தது. அதைப் பார்த்த ஓர் ஆட்டுக்குட்டி, 'உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டது.


ஓநாயும் 'நண்பா, நண்பா" இங்கே இளசான புல் கிடைக்குமா என்று பார்க்கிறேன்! இளம்புல் என்றால் எனக்கு ரொம்பப் பிரியம். அதைத் தின்று, ஜில்லென்று தண்ணீர் குடித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! உங்களுக்கெல்லாம் அந்த யோகம் கிடைத்திருக்கிறது! எனக்கு அது கிடைக்கவில்லை..." என்று கவலையுடன் கூறியது.

'அப்படியா! நீ புல்லா சாப்பிடுவாய்? நீ மாமிசத்தைத்தான் சாப்பிடுவாய் என்று என் அம்மாவும் அப்பாவும் சொன்னார்களே?" என்று ஆச்சரியத்துடன் கேட்டது ஆட்டுக் குட்டி.

'சேச்சே... அதெலாம் சுத்தப் பொய்!" என்றது ஓநாய்.

'அப்படியென்றால் இரு. நான் வெளியே வந்து, மலையின் அந்தப் பக்கம் இளம் புல் இருக்குமிடத்தைக் காட்டுகிறேன். நாம் இரண்டு பேரும் போய், அதைச் சாப்பிட்டுவிட்டு, நண்பர்களாக சுற்றலாம்!" என்று சொல்லிவிட்டு ஆட்டுக்குட்டி வேலி இடுக்கின் வழியாக நுழைந்து, ஓநாயின் பக்கம் போயிற்று. உடனே ஓநாய் அதன் மீது பாய்ந்து அதைக் கொன்று தின்றது.

அந்த ஆட்டுக் குட்டிக்கு, அனுபவம் நிறைந்த அம்மா, அப்பா பேச்சை கேட்காததால் பரிதாபமாக உயிரை விட்டது.



# டைனோசர் கால்தடங்களின் தாயகம்...!

பொலிவியா, வரலாற்றுக்கு முந்தைய உலகம் பற்றிய பார்வையை உலகுக்கு வழங்கும் டைனோசர் கால்தடங்கள் சேகரிப்புக்குத் தாயகமாக உள்ளது. அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் சிதறிக் காணக் கிடக்கும் இந்தக் கால்தடங்கள், சுமார் 68 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, டைனோசர்கள் பூமியில் சுற்றித் திரிந்த கிரெட்டேசியஸ் காலத்தைச் சேர்ந்தவை.

இந்த குறிப்பிடத்தக்க இடங்களில் சுக்ரேயில் பகுதியில் கால் ஓர்க்கோ எனும் அகன்ற பெரும் பாறைப்பகுதி உள்ளது. அங்கு பார்க் கிரெட்டாசிகோ அமைந்துள்ளது. இந்த செங்குத்தான குன்றின் முகம் ஏறத்தாழ எட்டு வெவ்வேறு டைனோசர்கா இனங்களின் 5,000 கால்தடங்களைக் காட்டுகிறது. இதில் தெரோபாட்கள், சாரோபாட்கள் மற்றும் ஆர்னிதோபாட்கள் ஆகியன அடங்கும்.

குன்றின் மீது பாதுகாக்கப்பட்ட கால்தடங்கள் பண்டைய உயிரினத் தொடக்க காலத்துடன் நேரடி இணைப்பை வழங்குகின்றன. இது ஒரு காலத்தில் அப்பகுதியில் வாழ்ந்து வந்த டைனோசர்களின் பண்புகள், நடவடிக்கைகள் மற்றும் இயக்கம் பற்றிய தெளிவை நமக்கு வழங்குகிறது.

ஒரு செங்குத்துச் சுவரில் கால்தடங்கள் பதிந்துள்ள இப்பகுதி மில்லியன் கணக்கான ஆண்டுகளாக பொலிவியாவில் நிலைத்துள்ளது. இந்தத் தளம் ஒரு குறிப்பிடத்தக்க பழங்காலத் தொல்பொருள் ஆய்வுப் பெட்டகமாகத் திகழ்கிறது. இந்தக் கம்பீரமான உயிரினங்களின் பண்டைய முத்திரைகளை நேரில் கண்டு வியக்கும் வண்ணம் உலகம் முழுவதிலுமிருந்து பார்வையாளர்களை ஈர்க்கிறது.

## வயிற்றில் பூச்சி தொல்லை...!

# தீர்வுகள் என்ன?

வயிற்றில் புழுக்கள் அதிகமாக இருந்தால் சாப்பிடும் உணவுகள் அனைத்தும் செரிமான மண்டலத்திற்குள் செல்லாமல் வயிற்றுப் போக்கை ஏற்படுத்தும். அது மட்டுமின்றி வாயு தொல்லை, குமட்டல், மலச்சிக்கல் மற்றும் வயிற் றில் ஒரு விதமான எரிச்சலையும் உண்டாக்கும். நார்ச்சத்து நிறைந்த உணவுகளை குழந்தைகளுக்கு கொடுப்பதன் மூலம் இப்படிப்பட்ட பிரச்சினைகளை தடுக்கலாம்.

மலவாயில் அரிப்பு ஏற்பட்டு இதன் காரணமாக குழந்தைகள் இரவு நேரத்தில் தூக்கம் கெட்டு சோர்வாக காணப்படுவார்கள். அடிக்கடி இதுபோன்ற பிரச்சினை ஏற்பட்டால் வயிற்றில் பூச்சிகள் அதிகளவில் இருக்கிறது என்று அறிந்து கொள்ளலாம்.



நாம் அவர்களுக்கு எவ்வளவு சத்து நிறைந்த உணவுகளை கொடுத்தாலும் அவற்றின் சத்துக்களை புழுக்கள் உறிஞ்சு, குழந்தைகளை சோர்வாகவே வைக்கும். பசி எடுக்காமல் இருக்கும். உடல் எடை குறையும். இதனால் வாரத்திற்கு ஒரு முறையாவது இந்த புழுக்களை அழிக்க வேண்டியது அவசியமாகும்.

குழந்தைகள் இரவில் தூங்க செல்லும்போது பற்களை கொறித்தால் வயிற்றில் புழுக்கள் இருப்பதாக அர்த்தம். இதற்கு காரணம் உடலில் இருக்கும் புழுக்களால் தேவையற்ற மன அழுத்தம் ஏற்படுத்தி என்ன செய்வதென்று அறியாமல் செய்வார்கள்.

அதேபோல் உடலில் ஏற்படும் இரத்த சோகை போன்றவை ஏற்பட காரணம், உருளை புழுக்கள் இருப்பது ஆகும். ஆகவே, குழந்தைகள் சாப்பிடும் இரும்பு சத்து, விட்டமின் அடங்கிய உணவை உறிஞ்சுவதால், இது நிகழ்கிறது. உடலில் ஒட்டுண்ணிகள் இருந்தால் சரும அரிப்பு மற்றும் எரிச்சல் கூட சில சமயத்தில் உண்டாகும். இந்த மாதிரியான அறிகுறிகள் உங்கள் குழந்தைகளுக்கு இருந்தால் உடனே மருத்துவரை அணுகி ஆலோசனை பெறுங்கள்.

# தலைமுடி உதிர்வதை தடுக்க இயற்கை வழி...!



தலைமுடி உதிர்வதைத் தடுக்க ஏராளமான பொருட்கள் சந்தைகளில் விற்கப்பட்டாலும், அவற்றில் உள்ள இரசாயனங்களால் மயிர்கால்கள் இன்னும் தான் சேதமடையும். எனவே முடிந்தவரை இயற்கை பொருட்களைக் கொண்டு தலைமுடிக்கு பராமரிப்புக்களை கொடுங்கள்.

தலைமுடி உதிர்வதைத் தடுக்கும் ஏராளமான பொருட்கள் நம் வீட்டில் இருந்தாலும், தினமும் சமைக்கும் சாதம் வடித்த நீர் தலைமுடி உதிர்வதை உடனே நிறுத்தும். சாதம் வடித்த நீரைக் கொண்டு தலைமுடிக்கு பராமரிப்பைக் கொடுத்து வந்தால், மயிரிழைகள் ஆரோக்கியமாக இருப்பதோடு, மயிர்கால்களும் வலிமையடைந்து, முடி உதிர்வது நிற்கும்.

வடித்த சாதத்தை சாப்பிடுவீர்களானால், சாதம் வடிகட்டும் போது, அந்த நீரை ஒரு பாத்திரத்தில் சேமித்து வைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் அந்த நீரில் விட்டமின்கள், கனிமச்சத்துக்கள் மற்றும் அமினோ அமிலங்கள் உள்ளன.

பின் அந்த நீரை குளிர வைக்கவேண்டும். இன்னும் சிறப்பான பலனைப் பெற அந்த நீரை அறை வெப்பநிலையில் 24 மணிநேரம் நொதிக்க வைக்க வேண்டும். இப்படி நொதிக்க வைக்கப்பட்ட நீரில் தலைமுடியின் வளர்ச்சியைத் தூண்டும் பண்புகள் இன்னும் அதிகமாக இருக்கும்.

அதன் பின் அந்த நீரை தலையில் தடவி, சிறிது நேரம் மென்மையாக மசாஜ் செய்ய வேண்டும். இதனால் இரத்த ஓட்டம் அதிகரிக்கும்.


தலையில் தடவி மசாஜ் செய்த பின், 15-30 நிமிடம் ஊற வைக்கவேண்டும். இப்படி ஊற வைக்கும் போது, சாதம் வடித்த நீரில் உள்ள சத்துக்கள் மயிர்கால்களில் ஊடுருவி வலுவாக்கும்.

15-30 நிமிடங்கள் ஊறிய பின், தலைமுடியை வெதுவெதுப்பான நீரால் அலச வேண்டும். அப்படி அலசும் போது ஷம்போ எதையும் பயன்படுத்த வேண்டாம். இல்லாவிட்டால், எந்த பலனும் கிடைக்காமல் போய்விடும்.

சாதம் வடித்த நீரை இப்படி வாரத்திற்கு 1-2 முறை பயன்படுத்தி வந்தால் சிறப்பான பலன் கிடைக்கும். அதற்காக 2 முறைக்கு மேல் பயன்படுத்தாதீர்கள். இல்லாவிட்டால் முடியில் புரதச்சத்து அதிகரித்து, பின் முடி வறண்டு போகும்.

தலைமுடி நல்ல நறுமணத்துடன் இருக்க சாதம் வடித்த நீரில் சில துளிகள் லாவெண்டர், ரோஸ்மேரி, புதினா போன்ற அத்தியாவசிய நறுமண எண்ணெய்களை ஊற்றி கலந்து பயன்படுத்துங்கள்.

## முகத்துக்கு பளபளப்பூட்டும் வாழைப்பழ ஃபேஸ் பெக்



நன்கு கனிந்த ஒரு வாழைப்பழத்தை ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொள்ளுங்கள்.

அதனை நன்கு மசித்துக் கொள்ளுங்கள்.

அதில் 1 தேக்கரண்டி தேன் மற்றும் சில துளிகள் எலுமிச்சை சாற்றினை சேர்த்து கலந்து கொள்ளுங்கள்.

பின்பு அதை முகம் மற்றும் கழுத்தில் தடவி 15-20 நிமிடம் ஊற வையுங்கள்.

இறுதியாக வெதுவெதுப்பான நீரால் முகத்தைக் கழுவுங்கள்.

இந்த ஃபேஸ் பெக்கை எந்த ஒரு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதற்கு முன்பும் பயன்படுத்தினால், முகத்திற்கு உடனடி பொலிவு கிடைக்கும்.

# மேக்கப்பை அகற்றி விட்டு படுக்கைக்குச் செல்லுங்கள்..!



பெண்கள் என்றாலே மேக்கப் செய்து கொள்வதில் அலாதி பிரியம் உண்டு. அதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் படுக்கைக்குச் செல்லும் முன் மேக்கப் போடும் ஒவ்வொரு பெண்ணும் கட்டாயம் முறையாக மேக்கப்பை அகற்றிவிட்டு தான் தூங்க வேண்டும். இதற்கான காரணங்களை தெரிந்துகொள்வோம்.

✦ முகத்திற்கு மேக்கப் செய்து கொண்டு நாள் முழுவதும் வெளியில் செல்லும்போது, அழுக்கு, எண்ணெய் மற்றும் சுற்றுச்சூழல் மாசுகள் அனைத்தும் முகத்தில் படியும். வீட்டிற்கு வந்து மேக்கப்பை அகற்றாமல் தூங்கச் சென்றால், அது முகப்பரு, கரும்புள்ளிகள் மற்றும் பிற சரும குறைபாடுகள் ஏற்பட வழி வகுக்கும். முறையாக மேக்கப்பை அகற்றி சுத்தப்படுத்தும் போதுதான் முகத்தில் இருக்கும் சருமம் சுதந்திரமாக சுவாசிக்க முடியும்.

✦ உறங்கும் போது, நமது சருமம் முக்கியமான பழுது மற்றும் மீள் உருவாக்கம் போன்ற செயல்முறைகளுக்கு உட்படுகிறது. மேக்கப்பை அகற்றாமல் விட்டால் அது இயற்கையான புதுப்பித்தலுக்கு இடையூறாக இருக்கும்.

✦ கண்களில் போடப்பட்டிருக்கும் மஸ்காரா, ஐ லைனர், காஜல் போன்ற அலங்காரங்களை அகற்றாமல் விட்டு விடும்போது கண்கள் சிவப்பதற்கும் எரிச்சலுக்கும் கண் தொற்று நோய்களுக்கும் வழிவகுக்கும். மஸ்காரா மற்றும் ஐ லைனர் போன்ற தயாரிப்புகள் காலப்போக்கில் பக்டீரியாவை அப்படியே கண்களில் தங்கச் செய்துவிடும்.

✦ மேக்கப்புடன் உறங்கும் போது சருமம் வறண்டு மந்தமாக மாறிவிடும். பெரும்பாலான மேக்கப் சாதனங்களில் சருமத்திலிருந்து ஈரப்பதத்தை உறிஞ்சக் கூடிய பொருட்கள் உள்ளன. மேக்கப்பை அகற்றுவது, இயற்கையான ஈரப்பதத்தை தக்க வைத்து ஆரோக்கியமான நிறத்தை மேம்படுத்த உதவுகிறது.

✦ மேக்கப்பை அகற்றத் தவறும் போது சருமத்தின் மேற்பரப்பில் பாதிப்புகள் ஏற்பட்டு சீரற்ற சரும அமைப்பு உருவாகும். முகத்தை சுத்தப்படுத்தி உறங்கும் போது அது இறந்த சரும செல்களை அகற்றி செல்களை ஊக்குவித்து மென்மையான அமைப்பை பராமரிக்க உதவுகிறது.

✦ முகத்திற்குப் பயன்படுத்தப்படும் சீரம், கிரீம்கள், மொய் சரைசர்கள் போன்றவை அகற்றப்படாமல் இருக்கும் போது அவை சருமத்தில் ஊடுருவி சருமத்தின் இயற்கையான அமைப்பை பாதிக்கும்.

✦ முகத்தை சுத்தமாக கழுவி உறங்கும்போது பிரகாசமான நிறத்தில் இருக்கும். முகத்தை கழுவாமல் உறங்கும் போது ஒரே இரவில் முகத்தில் சுருக்கங்கள் கோடுகள் போன்றவை உருவாகிவிடும். இதனால் காலையில் எழுந்ததும் முகம் மந்தமாகவும் சோர்வாகவும் காணப்படும். மேக்கப்பை அகற்றி விட்டால் சருமம் புத்துணர்ச்சியுடனும் துடிப்புடனும் இருக்கும்.

✦ சில மேக்கப் பொருட்கள் ஒவ்வாமை எதிர் வினைகளை ஏற்படுத்தலாம் அல்லது உணர்திறன் வாய்ந்த சருமத்தை எரிச்சல் அடையச் செய்யலாம். இது வீக்கம் மற்றும் முகச்சிவப்பிற்கு வழிவகுக்கும். இரவில் மேக்கப்பை அகற்றினால் இந்த அபாயங்களை தடுக்கலாம்.

✦ முறையாக மேக்கப்பை அகற்றுவது நல்ல சரும பராமரிப்பு பழக்கங்களுக்கு அடித்தளமாக அமைகிறது. சருமத்தை பராமரிப்பது நிலைத்தன்மையை ஊக்குவிக்கிறது. நீண்டகால ஆரோக்கியத்திற்கும் அவசியமாக அமைகிறது.



# புதிய கூட்டுக்கள் பழைய பகைமைகள்?

நிலாந்தன்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நோக்கித் தமிழ்க்கட்சிகள் புதிய ஒருங்கிணைப்புகளுக்குப் போகத்தொடங்கியுள்ளன. அதை வரவேற்க வேண்டும்.கடந்த 15 ஆண்டுகளில் முன்னெந்தத் தேர்தலையும்விட தென்னிலங்கைமையக் கட்சிகளுக்கும் சுயேச்சைகளுக்கும் எதிராக அணி திரள வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கும் ஒரு தேர்தல் இது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் என்பது பெருமளவுக்கு உள்ளூர் நிலைமைகளை உள்ளூர் சாதி, சமய, வட்டார உணர்வுகளைப் பிரதிபலிப்பவை. உள்ளூர்த் தலைமைகளைக் கட்டி எழுப்புவதற்கான ஒரு களம். ஆனால் அவை உள்ளூர்த் தலைமைகள் மட்டுமல்ல. ஒரு தேசியவாத அரசியலுக்கான அடிக்கட்டுமாணம் என்ற விளக்கத்தோடு மக்கள்மட்டக் கட்டமைப்புகளை அங்கிருந்துதான் பலப்படுத்தவேண்டும். அதாவது உள்ளூர் உணர்வுகளை அவற்றின் அசமத்துவங்களை நீக்கி தேசியக் கூட்டுணர்வாகத் திரட்டவேண்டும். கீழிருந்து மேல் நோக்கி.

அந்த அடிப்படையில் பார்த்தால், உள்ளூர்த் தலைமைகளை எப்படித் தமிழ் தேசியப் பண்புமிக்கவர்களாக வார்த்தெடுப்பது என்பதற்கான ஒரு பயில் களம்தான் உள்ளூராட்சி மன்றங்கள். ஆனால் தமிழ்க் கட்சிகளிடம் அது தொடர்பாக தமிழ்த்தேசிய நோக்கு நிலையிலிருந்து ஆழமான நீண்டகால நோக்கிலான விளக்கங்களும் பார்வைகளும் உண்டா ?

கடந்த வாரம் ஜனநாயகத் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் முன்முயற்சியால் உருவாக்கப்பட்ட கூட்டு எனப்படுவது தேர்தல் கூட்டு அல்ல என்று கூறப்பட்டாலும் அது நடைமுறையில் ஒரு தேர்தல் கூட்டாகத்தான் காணப்படுகின்றது. அக்கூட்டுக்குள் முதலில் காணப்பட்ட இரண்டு கட்சிகளும் ஒரு சுயேச்சைக் குழுவும் வெளியேறக்கூடிய ஆபத்துக்களை இக்கட்டுரை எழுதப்படுகையில் உணரக்கூடியதாக இருந்தது.

தேசிய மக்கள் சக்தி உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றுவதைத் தடுக்கும் நோக்கிலான கூட்டு அது என்று எடுத்துக்கொண்டால், தமிழ்த்தேசிய வாக்குகளைத் திரட்டுவதற்கான ஒரு கூட்டு என்றும் அதை வியாக்கியானப்படுத்தலாம். ஆயின் அக்கூட்டானது தமிழ்த்தேசிய வாக்குகளை கொத்தாகத் திரட்டும் சக்தி மிக்கதா ?

தமிழ்த் தேசியப் பரப்பில் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின் இரண்டு விதமான ஒருங்கிணைப்பு முயற்சிகள் உண்டு. ஒன்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியால் முன்னெடுக்கப்படுகின்ற யாப்புருவாக்க முயற்சிகளை நோக்கிய ஒருங்கிணைவு.அதில் சிறீதரன் முன்னணியோடு இணக்கமாகக் காணப்படுகின்றார்.ஆனால் தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரன் அணியும் அந்த அணியின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் மத்திய குழுவும் அந்த ஒருங்கிணைப்பு முயற்சிகளுக்கு எதிராக இருக்கின்றன. இந்த விடயத்தில் சிறீதரனுக்கும் சுமந்திரனுக்கும் இடையிலான தலைமைத்துவப் போட்டி முன்னணியின் ஒருங்கிணைப்பு முயற்சிகளில் பிரதிபலிப்புகளை ஏற்படுத்துகிறது.

இது ஏறக்குறைய பொது வேட்பாளரின் போது காணப்பட்ட ஒரு நிலை. அங்கேயும் தமிழரசுக் கட்சிக்குள் காணப்படும் உட்பகையானது பொது வேட்பாளர் தொடர்பான நிலைப்பாடுகளில் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தியது. ஆனால் இந்த இரண்டு விடயங்களிலும் சிறிதரன் தேசத்திரட்சிக்கு ஆதரவாக நின்றார்நிற்கின்றார். அவரைப் பொறுத்தவரை அது தவிர்க்க முடியாதது. கட்சிக்குள் அவருடைய நிலையை பலப்படுத்துவதற்கு அவருக்கு வெளிக் கூட்டுகள் அவசியம்.

சிறீதரனுக்கும் சுமந்திரனுக்கும் இடையிலான பகை கஜேந்திரகுமாரின் ஒருங்கிணைப்பு முயற்சிகளில் பிரதிபலிப்புகளை ஏற்படுத்துவதைப் போலத்தான் சந்திரகுமாருக்கும் சிறீதரனுக்கும் இடையிலான பகை, புதிய கூட்டு முயற்சிகளிலும் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தும். அப்படித்தான் மணிவண்ணனுக்கும் கஜேந்திரக்குமாருக்கும் இடையிலான பகையுணர்வும், தவராசாவுக்கும் சுமந்திரனுக்கும் இடையிலான பகையுணர்வும் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தும்.

சுமந்திரனுக்கும் சிறீதரனுக்கும் இடையிலான பகை எனப்படுவது பொது எதிரிக்கு எதிரான பகையுணர்வை விடவும் ஆழமானதாகவும் கூர்மையானதாகவும் வளர்ந்து வருகிறது. அதுபோலவே சிறீதரனுக்கும் சந்திரகுமாருக்கும் இடையிலான பகை என்பது பெருமளவுக்கு மாவட்டமட்டப் பண்பை கொண்டது. அதிகம் உள்ளூர் நிலைமைகளால் தீர்மானிக்கப்படுவது.

புதியகூட்டை அறிவிக்கும் முதலாவது சந்திப்பின்போது இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. இக்கூட்டுக்குள் சந்திரகுமார் இருக்கும்வரை சிறீதரனைக் கொண்டு வருவது கடினம் என்று சுட்டிக் காட்டப்பட்ட பொழுது, சந்திரகுமார் கூறியிருக்கிறார், பிரச்சினையில்லை சிறீதரன் இந்த அணிக்குள் வருவார் என்றால் நாங்கள் தமிழரசுக் கட்சியோடு போகிறோம் என்று. கிளிநொச்சியில் சந்திரகுமாருக்கும் சிறீதரனுக்கும் இடையிலான பகையும் சிரீதரனுக்கும் சுமந்திரனுக்கும் இடையிலான பகையும் அங்கே புதிய சேர்க்கைகளைத் தீர்மானிக்கின்றன. சுமந்திரனுக்கு ஆதரவான அணி அங்கு சந்திரகுமாருக்கு நெருக்கமாகக் காணப்படுகின்றது

அப்படித்தான் மணிவண்ணனின் விடயத்திலும். மணிவண்ணன் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்மக்கள் கூட்டணியும், ஐங்கரநேசனும் புதிய கூட்டுக்குள் சந்திரகுமார் இணைக்கப்பட்டிருப்பதை ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிகிறது. தமிழரசுக் கட்சியில் இருந்து வெளியேறிய தவராசா அணியும் அக்கூட்டுக்குள் முரண்படுவதாகத் தெரிகிறது.அதற்காக இவர்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு ஏதும் புதிய உடன்படிக்கைக்கு போகக் கூடுமா? தவராசா அணிக்கும் சுமந்திரன் அணிக்கும் இடையிலான இடைவெளியும் மணிவண்ணனுக்கும் முன்னணிக்கும் இடையிலான பகையும் இக்கூட்டுக்களைத் தீர்மானிக்கும் காரணிகளாகும்.

மணிவண்ணன், ஐங்கரநேசன்,தவராசா அணி போன்றவற்றைச் சுதாகரிப்பதற்காக புதியகூட்டானது சந்திரகுமாரை வெளியே விடுமா? இல்லை. அதற்கான வாய்ப்புக்கள் இப்போதைக்குக் குறைவு. ஏனென்றால் புதிய கூட்டை உருவாக்கும் முன்முயற்சிகளை எடுத்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஒரு சினேக சக்தியாக கருதவில்லை. தவிர ஏற்கனவே யாப்புருவாக்க முயற்சிகளுக்காக செல்வம் அடைக்கலநாதனை கஜேந்திரக்குமார் சந்தித்திருக்கும் ஒரு பின்னணியில்தான் மேற்படி கூட்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. அதற்குள் விக்னேஸ்வரனின் பிரதிநிதியாக மணிவண்ணனும் கலந்துகொண்டார். விக்னேஸ்வரனின் கட்சிக்கும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையிலான இடைவெளியை தீர்மானிக்கும் அம்சங்களில் மணிவண்ணனும் ஒருவர். எனவே கூட்டிக்கழித்து பார்த்தால் புதிய கூட்டுக்குள் பழைய பகைமைகள் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம்.

தமிழ்மக்கள் உருகிப் பிணைந்த ஒரு தேசத் திரட்சியாக இல்லை. தமிழ்த் தேசியப் பரப்பில் எத்தனை துருவ நிலைகள்? ஆயுதப் போராட்டத்தில் இயக்கங்களுக்குள் ஏற்பட்ட பகைமையின் தொடர்ச்சியாகக் காணப்படும் தியாகி – துரோகி என்ற பகைநிலை. கட்சிகளுக்கு இடையிலான பகைக்கட்சிகளுக்குள் காணப்படும் குழுக்களுக்கு இடையிலான பகைக்கட்சிகளில் இருந்து வெளியேறியவர்களுக்கும் தாய்க் கட்சிக்கும் இடையிலான பகை என்றிவ்வாறாக பல்வேறு பகைநிலைகள் உண்டு. இந்தப் பகைமைகள் அனைத்தும் பழையவை. இவை புதிய கூட்டுக்களை எவ்வாறு தீர்மானிக்கப் போகின்றன?

இப்பொழுது தமிழ்த்தேசியப் பரப்பில் நான்கு தரப்புக்கள் துலக்கமாக தெரிகின்றன. முதலாவது தமிழரசுக் கட்சி. இரண்டாவது முன்னணி. மூன்றாவது புதிய கூட்டணி. நாலாவது இவற்றுக்குள் வராத சிறிய கட்சிகளும் சுயேச்சைகளும்.

தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணி தேர்தலை தனியாகவே எதிர்கொள்ளப் போவதாக தெரிகிறது. நாடாளுமன்றத் தேர்தலில் அதிக ஆசனங்களை வென்ற கட்சி என்ற அடிப்படையில் தாமே உள்ளதில் பெரிய கட்சி,பிரதான கட்சி, தலைமைதாங்கும் கட்சி என்ற பொருள்பட சுமந்திரன் கருத்துக்கூறி வருகிறார். தேர்தலுக்கு முன் கூட்டுக்களை உருவாக்காமல் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் கூட்டுக்களை வைத்துக்கொள்ளலாம் என்றும் அவர்கள் சிந்திப்பதாகத் தெரிகிறது.

இது தாங்களே பெரிய கட்சி என்ற அடிப்படையில் அவர்கள் வகுத்துள்ள தந்திரம். தேர்தலுக்குப் பின் கூட்டுக்களை வைக்கும்பொழுது தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் ஏனைய கட்சிகளின் உயரம் எதுவென்று தெரிந்துவிடும்.அந்த அடிப்படையில்தான் அவர்கள் பேரம்பேச முடியும். மாறாக தேர்தலுக்கு முன் கூட்டை வைத்தால், கட்சிகளின் உயரம் இதுவென்று தெரியாமல் அவற்றின் தகுதிக்கு மீறி இடங்கொடுக்க வேண்டிவரும். இது தாமே தீர்மானிக்கும் கட்சி என்ற அடிப்படையில் கட்சி நோக்குநிலையில் இருந்து எடுத்த முடிவு. நிச்சயமாக தேசத்திரட்சி என்ற நோக்குநிலையில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு முடிவு அல்ல.

தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு இறந்த காலத்திலிருந்து எதையும் படித்திருக்கவில்லை என்றே தோன்றுகிறது. உள்ளதில் பெரிய கட்சீதலைமை தாங்கும் கட்சி என்று தங்களை அழைத்துக் கொள்ளும் ஒரு கட்சியானது தேசியவாத அரசியலுக்குத் தலைமை தாங்கும் கட்சி தாங்கள் தான் என்ற பொறுப்பை உணர்ந்து முடிவெடுக்கவில்லை. தேசத் திரட்சியை நோக்கித்தான் கட்சிகளை ஒருங்கிணைக்க வேண்டும். தேர்தலை நோக்கி அல்ல. அது மிக முக்கியம். அந்த ஒருங்கிணைப்பு 2009க்கு பின்னரான புதிய பண்புருமாற்ற அரசியலாகவும் இருக்க வேண்டும்.அது மிக முக்கியம்.மாறாக அவரவர் பலத்தின் அடிப்படையில் கூட்டுக்களை வைத்துக் கொள்ளலாம் என்பது முழுக்க முழுக்க தேர்தல் நோக்கு நிலையிலானது.

11 ஆம் பக்கம் பார்க்க...

# உக்ரைனிய போரில் அமெரிக்காவின் இரட்டை முகம்!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

(ரஷ்ய படையெடுப்பிற்கு சில வாரங்களுக்குப் பிறகு 2022இல் ஒரு சமாதான ஒப்பந்தம் கையெழுத்திடத் தயாராக உக்ரைன் இருந்தது. ஆனால் அமெரிக்காவின் அன்றைய ஆட்சியாளர்கள் அந்த ஒப்பந்தத்தைத் தடுத்தனர் என்பதும் பலருக்கும் தெரியாத உண்மையாகும்.

வியட்நாமிலும், ஆப்கானிஸ்தானிலும் தற்போது உக்ரைனிலும் அமெரிக்கர்கள் தங்கள் வேலை முடிந்ததும் அவர்களை குப்பையில் எறிந்துவிட்டு அடுத்த இடத்திற்குச் சென்று விடுவார்கள். அமெரிக்கர்களுக்கு தேவை தங்கமும் தகரமும் தான். இதுவே துயரமிகு வரலாறாக தொடர்கிறது)

உக்ரேனில் 2014 இல் ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட விக்டர் யானுகோவிச்சின் அரசாங்கத்தை கவிழ்த்த அரசியல் எழுச்சியின் பெரும்பகுதிக்கு அமெரிக்காவே காரணம். அதற்கு அப்போது கூறப்பட்ட காரணம் விக்டர் யானுகோவிச்சின் அரசு ரஷ்ய சார்பு நிலையை கொண்டது என்ற குற்றச்சாட்டே.

அத்துடன் டான்பாஸில் ரஷ்ய மொழி பேசும் சிறுபான்மையினர் மற்றும் வணிகங்களைத் தாக்கும் பாசிச உக்ரைனிய தேசிய சார்பு தீவிரவாதிகளுக்கு அமெரிக்கா ஆயுதங்களை அள்ளி வழங்கியது.

டான்பாஸில் மோதலை முடிவுக்குக் கொண்டுவர ஜெலென்ஸ்கியின் முயற்சிகளை அமெரிக்கா தடுத்தது என்ற குற்றச்சாட்டை முன்வைத்தது முன்னைய உக்ரைனிய அரசியல் இருந்த அமைச்சர்கள் ஆவார்கள்.

உக்ரைன் தனது சொந்த அணு ஆயுதங்களைக் கொண்டிருப்பது பற்றி ஊக்கமளிக்கும் வகையில் பேச ஜெலென்ஸ்கியை அமெரிக்கா ஊக்குவித்ததுடன், பல்வேறு உக்ரேனிய இராணுவப் பிரிவுகளை நேட்டோ பயிற்சிகளில் ஈர்த்தது.

போருக்கு முன்பாகவே ரஷ்யாவுடன் செய்யப்பட்ட அனைத்து ஒப்பந்தங்களிலிருந்தும் உக்ரைன் விலகவேண்டும் என்று அமெரிக்கா கடுமையாக வலியுறுத்தியது.

2022 இல், ரஷ்ய படையெடுப்பிற்கு சில வாரங்களுக்குப் பிறகு ஒரு சமாதான ஒப்பந்தம் கையெழுத்திடத் தயாராக இருந்தது. ஆனால் அமெரிக்காவின் அன்றைய ஆட்சியாளர்கள் அந்த ஒப்பந்தத்தைத் தடுத்தனர் என்பதும் பலருக்கும் தெரியாத உண்மையாகும்.

ரஷ்யாவுடன் போரிட உக்ரேனிய இராணுவ அதிகாரிகளின் ஆலோசனை இருந்தபோதிலும், அமெரிக்கக் கருத்தைப் பெறுவதற்காக அமெரிக்கா உக்ரைனை பெரும் தாக்குதல்களைத் திட்டமிட்டு செயல்படுத்த கட்டாயப்படுத்தியது. ஆயினும் இந்த தாக்குதல்கள் அனைத்தும் பேரழிவுகளை ஏற்படுத்தின.

இப்போது உக்ரைனிய அரசு காணும் தோல்விக்கு நேரடியாக அமெரிக்காவே பொறுப்பேற்க வேண்டும்.

போர் உக்ரைனுக்கு ஒரு பெரிய அச்சுறுத்தலாக உள்ளது. இப்போரில் உக்ரைனை மேலும் மேலும் துருப்புக்களை முன்னணியில் ஈடுபடுத்த அமெரிக்க இராணுவ ஆலோசனைகளே என்றும் கூறப்பட்டது.

அதேவேளை நேட்டோ தொடர்ந்து உக்ரைனுக்குத் தேவையான குண்டுகள் மற்றும் வெடிமருந்துகளை வழங்கத் தவறிவிட்டது என்றும் உக்ரைனிய இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உக்ரைன் இப்போரில் தோற்கும் என்பது தெளிவாகத் தெரிந்ததும், அமெரிக்கா சவுதி அரேபியாவில் திட்டமிட்டே 'சமாதானப் பேச்சுவார்த்தைகளில்' ஈடுபட்டது. அதன் பின்னர் உக்ரைன் தரப்பை பேச்சு வார்த்தையில் இருந்தும் விலக்கியது.

மற்றோரு உண்மை என்னவென்றால் டிரம்ப் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் - அமெரிக்கா உக்ரைனை மெதுவாக ஒதுக்கித்தள்ளி, அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள கனிம சொத்துக்களை இழப்பீடு கோரியுள்ளது.

தற்போது மிகவும் அவமானமாக, ரஷ்யாவுடனான போருக்கு உக்ரைனையே குற்றம் சாட்டுகிறார் அதிபர் டிரம்ப். அவர்கள் இதையெல்லாம் நிறுத்த ஒரு ஒப்பந்தம் செய்திருக்கலாம் என்றும் கூறுகிறார்.

ஆனால் இந்த உண்மைகளை மூடி மறைத்தே அமெரிக்கா அடிக்கடி அமைதியைத் தடுத்தது, போரையும் தொடரச் செய்தது.

இப்போது ரஷ்யாவுடனான உறவை புதுப்பித்துக் கொள்ளும் அமைதிப் பேச்சுவார்த்தைகளில் உக்ரைனோ ஐரோப்பாவோ அழைக்கப்படவில்லை என்பது



நேட்டோ நாடுகளின் கன்னத்தில் அறைந்தது போல் உள்ளது.

உக்ரைனின் தோல்விக்கான காரணங்களையும் தனது போக்கில் டிரம்ப் தெளிவுபடுத்தி உள்ளார்.

உக்ரைனின் பொருளாதாரம் பாரியளவில் சிதைந்துள்ளது. அதன் அரசின் உள்கட்டமைப்பு அழிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் பெரும் நிலப்பரப்பு ரஷ்யாவிடம் இழக்கப்பட்டுள்ளது.

இந்த தேவையற்ற போரில் பல்லாயிரம் உக்ரைனிய வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

வரலாற்றில் இது ஒரு பாடமாக இருக்கட்டும். மேற்கத்திய முதலாளித்துவ அரசுகளுக்காக வக்காலத்து வாங்கி போராடும்போது இதுதான் நடக்கும்.

வியட்நாமிலும், ஆப்கானிஸ்தானிலும் தற்போது உக்ரைனிலும் அமெரிக்கர்கள் தங்கள் வேலை முடிந்ததும் அவர்களை குப்பையில் எறிந்துவிட்டு அடுத்த இடத்திற்குச் சென்று விடுவார்கள். அமெரிக்கர்களுக்கு தேவை தங்கமும் தகரமும் தான். இதுவே துயரமிகு வரலாறாக தொடர்கிறது.

---

## வனமெல்லாம்...

பெற்றுள்ளது. உலகத் தமிழ் பண்பாட்டுக் கழக இலங்கைக் கிளையின் தலைவர் அருணாசலம் சத்தியானந்தம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், நூலின் முதற்பிரதியை யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பெற்றுக்கொண்டதுடன், நூல் அறிமுக உரைகளை யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா மற்றும் படைப்பாளியும் சமூக செயற்பாட்டாளருமான வெற்றிச்செல்வி (சந்திரகலா) ஆகியோர் நிகழ்த்தியிருந்தனர்.

படைப்பாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் உள்ளிட்ட பலரின் பங்கேற்போடு நடைபெற்ற இந்நிகழ்வில், போர்க்கால அறிவியல் கண்டுபிடிப்புகளை அடையாளப்படுத்தும் வகையில் மங்கல விளக்கிற்குப் பிரதியீடாக குப்பி விளக்குகள் ஏற்றப்பட்டது பலரதும் கவனத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தென்னை...

கட்டத்தை அடைகின்றன.

எனவே வெள்ளை ஈ தாக்கத்தைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தென்னஞ் செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சாந்தனின்...

பட்டுள்ளது. இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், கைதாகி சுமார் 32 வருடங்களுக்கு மேலாக சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டு விடுதலையான சாந்தன், திருச்சி சிறப்பு முகாமில் குடிவரவு சட்டத்தின் கீழ் கடந்த 2023ஆம் ஆண்டு முதல் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கடந்த 2024ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி காலமானார். அவரது விடுதலைக்காக அவரது குடும்பத்தினர் 33 வருடங்களாகப் போராடிவந்தனர். சிறையில் இருந்து விடுதலையான பின்னர் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவரை, மீள இலங்கைக்கு அழைத்துவர குடும்பத்தினர் சுமார் ஒன்றரை வருட காலமாகப் போராடினார்கள் எனினும் அவரது உயிரற்ற உடலையே இலங்கைக்கு கொண்டு வந்து அவரது சொந்த ஊரில் விதைக்க முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## விலங்குகளை...

என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள அனைத்து அதிகாரிகளும் இதில் ஈடுபடுவார்கள் எனவும் அவர்கள் பொதுமக்களுக்கு அறிவிப்பார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒருவரின் தோட்டத்திலோ அல்லது பண்ணையிலோ எத்தனை மர அணில்கள், மயில்கள், குரங்குகள் அல்லது பிற விலங்குகள் இருந்தன என்பதை 5 நிமிடங்களுக்குள் கணக்கிட வேண்டும் என்றும், உரிமையாளர் இல்லாத நிலம் இருந்தால், அருகிலுள்ள தோட்டத்தைச் சேர்ந்த ஒருவரை அதிகாரிகள் மூலம் அந்தத் தோட்டத்திலும் பொருத்தமான கணக்கெடுப்பை நடத்த அனுப்ப வேண்டும் எனவும் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

5 நிமிடங்களுக்குள் விலங்குகள் மற்ற தோட்டங்களுக்கு தப்பிச்செல்ல வாய்ப்பு இருப்பதாலேயே இந்த கணக்கெடுப்புக்கு 5 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டதாகவும் இந்தத் தகவல்கள் அனைத்தும் அதிகாரிகள் மூலம் அமைச்சகத்திற்குக் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் விவசாய மற்றும் கால்நடை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், விவசாய மற்றும் கால்நடை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்னவின் ,ந்த கருத்தை விமர்சித்து பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் கருத்து தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, ஐந்து நிமிடங்களுக்குள் விலங்குகளை கணக்கெடுக்க முடியுமா? இது நடைமுறைக்கு சாத்தியமற்ற ஒரு கேலிக்கூத்தான விடயம் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தெரிவித்துள்ளார்.

## செம்மணியில்...

பட்ட 40 சிதிலங்களில் ,ரண்டு சிதிலங்கள் விலங்குகளின் என்புகள், ஏனைய அனைத்தும் மனித என்புத் தொகுதிகள் என்ற விடயத்தை அவர் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றார். அத்துடன், நிலத்திலிருந்து ,ரண்டு அடிக்குக் கீழ் தான் மனித எச்சங்கள் எடுக்கப்பட்டுள்ளன. மண் மாதிரி அடிப்படையில் குறித்த ,டம் சதுப்பு நிலம் போல் தெரிவதாகவும், குறித்த இடம் தொடர்ச்சியாக மனித எலும்புகளால் நிறைந்தவொரு பகுதியாக உள்ளதா? அல்லது தனிப்பட்ட புதைகுழியா? என்பதை ஆய்வு செய்ய வேண்டுமெனவும் தனது அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளதுடன், இவற்றின் அடிப்படையில் முதற்கட்ட ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டுமென மன்றில் கோரிக்கையை முன்வைத்தார்.

மூத்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ராஜ் சோமதேவ இதுதொடர்பான ஆய்வை மேற்கொள்வதற்குத் தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துள்ளதாகவும் தனது அறிக்கையில் சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவநாதன் குறிப்பிட்டுள்ளார். அவரது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிவான் முதற்கட்ட ஸ்கானர் மூலமான சோதனைகளை முடித்த பின்னர் அடுத்தகட்ட ஆய்வை மேற்கொண்டு அதன் பின்னர் தொடர்ச்சியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், காலநிலையைக் கருத்திற்கொண்டு ,ந்த ஆய்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் உத்தரவிட்டார்.

## யாழ்....

நிறுவுனர் தர்மிகா அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் உதவித் தொகையை வடமராட்சி கிழக்கு சமூக மாற்றத்திற்கான ஊடக மையம் ஊடாக இன்று வழங்கிவைத்தார்.

சமூகமாற்றத்திற்கான ஊடக மையத்தில் வைத்து இளைஞனிடம் உதவித் தொகையை கையளித்த ஊடகமைய தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் சி.த காண்டீபன் கருத்து தெரிவிக்கையில்,

லஷ்மிகா அறக்கட்டளை நிறுவுனருக்கு நன்றி தெரிவிப்பதுடன் மனிதர்கள் மனிதர்களாக மதிக்கப்பட்டு, அவர்களது மனித உரிமைகளும் மதிக்கப்பட்டு சமூக மாற்றம் ஒன்றை உருவாக்க அனைவரும் முன்வரவேண்டுமென தெரிவித்தார்.

வார இதழ் தேசியம் www.thesiyamnews.com THESIYAM

## புலிகளுடைய...

கின்றது. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் இவ்வாறான நிலைமைகள் இருந்ததில்லை. அதிலும் குறிப்பாக வடமாகாணத்தில் போதைப்பொருள்கள் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

நான் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவன். வன்னித் தேர்தல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவன். வன்னியில் இன்று மிகமோசமான வகையில் கசிப்பு, கஞ்சா, ஐஸ், ஹெரோயின் இன்னும் பல பெயர்களில் சட்டவிரோத போதைப்பொருள்கள் தாராளமாக கிடைக்கின்றன.

முல்லைத்தீவில் படையினர் மிக அதிகமாக உள்ளதாக பல புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இவற்றுக்கு மத்தியில் போதைப்பொருள் பாவனையும் அதிகரித்து வருகின்றது என்றால், படையினரால் இவற்றைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றே அர்த்தம்.

நான் கிராமங்கள்தோறும் மக்களின் குறைகேள் சந்திப்புகளை நடத்தி வருகின்றேன். அந்தவகையில் கடந்தமாதம் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வெள்ளப் பள்ளம் என்ற கிராமத்தில் இடம்பெற்ற எனது மக்கள் குறைகேள் சந்திப்பில் பெருமளவு மக்கள் கூடியிருந்து என்னிடம் கைகூப்பி வேண்டினார்கள். சிலர் அழுதார்கள். தங்களுடைய குடும்பங்கள் சீரழிவதாகவும் இதனைக் கட்டுப்படுத்துங்கள், ஜனாதிபதியிடம் சொல்லுங்கள். நாடாளுமன்றத்தில் சொல்லுங்கள் எனத் தெரிவித்தனர். தங்களுடைய கிராமத்தில் கசிப்பு, கஞ்சா உள்ளிட்ட சட்டவிரோத போதைப்பொருள்களால் இதுவரை பலர் இறந்துவிட்டதாகவும், சிலர் இறக்கும்நிலையில் இருப்பதாகவும் மக்களால் என்னிடம் முறையிடப்பட்டது.

இதேபோல பாரதிபுரம், வள்ளுவர்புரம், இளங்கோபுரம், தேராவில் பகுதிகளில் இதுவரை 43பேர் மாண்டுவிட்டதாகவும், இன்னும் இறக்கும் நிலையில் சிலர் இருப்பதாகவும் தெரிவித்து, தங்களுடைய குடும்பங்களைக் காப்பாற்றும்படி வேண்டுகின்றார்கள். இப்படி நிலைமைகள் இன்னும் பல கிராமங்களில் உள்ளன. நிலைமைகளைச் சற்று எண்ணிப்பாருங்கள். பொலிஸார் என்ன பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். ஏன் இவர்களால் போதைப் பொருள் உற்பத்திகளையும், ஊடுருவல்களையும் கட்டுப்படுத்த முடியவில்லை?

புலிகளின் காலத்தில் 'தூய இலங்கை' திட்டம் நாடு முழுவதும் இருக்கவில்லை. ஆனால், அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகள் தூய்மையாகவே இருந்தன - என்றார்.

## ஜே.வி.பி....

பதிவாகியுள்ளன. இவ்வாண்டு இதுவரையான காலப்பகுதியில் 17 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களும், 5 கத்திக்குத்து அல்லது வாள்வெட்டு சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

### சமீபத்தைய துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள்

மிதேனியவிலும் கொழும்பிலும் இடம்பெற்றுள்ளன மிதேனியாவில் 39 வயது நபரும், அவரது மகளும் மகனும் இனந்தெரியாத நபர் ஒருவர் இவர்கள் பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டதில் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர் கஜா என அழைக்கப்படும் அருண விதானகமகே எனவும் இவர் பல குற்றச்செயல்களில் ஈடுபட்டவர் எனவும் பொலிஸார் கூறினர்.

இதேவேளை கொழும்பில் பாதள உலகத்தை சேர்ந்த கனேமுல்ல சஞ்சீவ கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

துணிச்சலான விதத்தில் இந்த கொலை முன்னெடுக்கப்பட்டதுடன், சட்டத்தரணி போன்று வேடமணிந்த ஒருவர் நீதிமன்ற வளாகத்திற்குள் நுழைந்து நீதிமன்றத்தில் துப்பாக்கி பிரயோகத்தினை மேற்கொண்ட பின்னர் அங்கிருந்து தப்பிச்சென்ற நிலையில் கைது செய்யப்பட்டிருந்தார்.

கெசெல்பத்தர பத்மே என அழைக்கப்படும் மனுனுதினு பத்மசிறி மற்றும் கொமாண்டர் சலிந்த ஆகியோரினால் கனேமுல்ல சஞ்சீவவை கொலை செய்ய ஒப்பந்தமிடப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலைக்காக ஒன்றரை கோடி ரூபா ஒப்பந்தம் இடப்பட்டிருந்த நிலையில் 200,000 ரூபா மாத்திரம் வழங்கியதாகவும் எஞ்சிய தொகையை இந்தியாவில் பெற்றுக்கொள்வதற்கு தாம் இணங்கியிருந்ததாகவும் சந்தேகநபர் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

இதேவேளை, கொட்டாஞ்சேனை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் நபர் ஒருவர் கொல்லப்பட்டார்.

இந்த துப்பாக்கிச் சூட்டினை நடத்திய இரண்டு சந்தேகநபர்களை ஒருகொடவத்த பகுதியில் வைத்து க்ரேண்ட்பாஸ் பொலிஸார் கைது செய்தனர்.

இதனையடுத்து அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணைகளின் ஊடாக அவர்கள் சில ஆயுதங்களை மறைத்து வைத்திருப்பது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இந்ததகவலின் அடிப்படையில், கொழும்பு - 15 முகத்துவாரம், காக்கைத்தீவு பகுதிக்கு சந்தேகநபர்கள் இருவரும் அழைத்து வரப்பட்ட நிலையில் சந்தேகநபர்கள் இருவரும் குறித்த பகுதியில் வைத்து பொலிஸாரின் துப்பாக்கியைப் பறித்து தாக்குதல் நடத்த முயற்சித்துள்ளனர்.

இதன்போது சந்தேகநபர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையில், சந்தேகநபர்கள் இருவரும் சுட்டுக்கொலை செய்யப்பட்டமை பல்வேறு விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.

### விமர்சனங்கள்

நீதிமன்ற வளாகத்தினுள் நடந்த கொலை, நீதிமன்றத்தை மட்டுமன்றி முழு சமூகத்தையும் பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளியுள்ளதுடன், இது மிகவும் முக்கியமான தொரு விடயமாகும் என எதிர்க்கட்சிகள் விமர்சனத்தை முன்வைத்தன.

கடந்த 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரையிலான 4 நாட்களில் 8 கொலைகள் நடந்துள்ளது. இது தேசிய பாதுகாப்புக்கு பெரும் பிரச்சினையாக அமைந்திருந்தாலும், அது ஒரு பிரச்சினையல்ல என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளமை ஏற்க முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோன்று, பொலிஸாரின் என்கவுன்டர் கொலைகள் குற்றங்களை தடுப்பதற்கான வழிமுறையல்ல. என்கவுன்டரில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அதற்கான விளைவுகளை எதிர்நோக்க வேண்டிய நிலையேற்படலாம் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் சாலிய பீரிஸ் எச்சரித்துள்ளார்.

எந்த அரசாங்கத்தின் கீழும் சட்டத்திற்கு புறம்பான கொலைகளை ஏற்க முடியாது எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் விளக்கம்

நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தினால் நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை. பொதுவாக குறிப்பிட்ட குழுக்களுக்கு இடையில் இடம்பெறும் சண்டைகள் மோதல்கள் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் தொடர்ந்தும் இவ்வாறான ஒருங்கமைக்கப்பட்ட குழுக்களால் இவ்வாறான அசம்பாவிதங்கள் இடம்பெற்று வருகின்றது. எனினும் நேற்றைய சம்பவம் குறித்து அரசு கடும் அவதானத்தினை செலுத்தியுள்ளதுடன், இது விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், குற்றச்செயல்கள் இடம்பெற்ற உடனேயே தனியான விசாரணைகள் நடத்தப்படுவதாகவும் தேசியப் பாதுகாப்புக்கு இடையூறாக இந்த சம்பவத்தைக் கருத வேண்டிய அவசியமில்லை என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மேலும் தெரிவித்துள்ளார்.

### ஜனாதிபதியின் இரட்டை வேடம்

எது எவ்வாறாயினும் ஜனாதிபதியும் அரசாங்கமும் நாட்டில் இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களுக்கு விளக்கங்களும் வியாக்கியானங்களும் கூறினாலும் இது சாதாரண பிரச்சினையாக எடுத்துக் கொள்ள முடியாது என பொது மக்களும் சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போதைய ஜனாதிபதி எதிர்க்கட்சியில் இருக்கும் போது, நாட்டில் இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டு கலாசாரத்தை ஏற்க முடியாது எனவும் அதேபோன்று சந்தேக நபர்களை அடையாளம் காட்டுவதற்காகக் கூட்டிச் சென்றதாகக் கூறி அவர்களை சுட்டுக்கொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் கூறியிருந்தார்.

ஆனால், அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு சுமார் நான்கு மாதங்களில் ஆங்காங்கே எவ்வித பயமும் இல்லாமல் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் இடம்பெற்று வருவதுடன், சாட்சிங்களை அடையாளம் காண அழைத்துச் சென்றதாக்க கூறி பொலிஸாரினால் இரு சந்தேக நபர்களும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

எதிர்க்கட்சியில் இருக்கும் போது துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் குறித்து ஒரு கதையைக் கூறிய ஜனாதிபதி தற்போது அதற்கு இடமளிக்கும் வகையில் செயற்படுவதாக பல்வேறு குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

### அதிக கவனம் செலுத்துங்கள்

நாட்டின் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் பட்சத்தில் அது சர்வதேசங்களுக்கு மத்தியில் பாரிய அச்சத்தை ஏற்படுத்துடன் மக்கள் மத்தியிலும் பாரிய அச்சத்தை ஏற்படுத்தும்.

இந்த நிலையில், மக்களின் பாதுகாப்புக்காக இருக்கும் உத்தியோகபூர்வ நிறுவனங்களில் சில நபர்கள் வரையில் பாதாள உலகத்தின் செயற்பாடுகள் விரிவடைந்திருப்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆகவே, எதிர்காலத்தில் நிச்சயமாக பாதாள உலகத்தை முழுமையாக முடிவுக்குக் கொண்டுவர சகல நடவடிக்கையும் எடுக்கப்படும் எனவும் இதற்காக சிறிது காலம் எடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, தற்போதைய அரசாங்கத்தின் திட்டமிடலுக்கு அமையவே இந்த துப்பாக்கிசூட்டுக் கொலைகள் இடம்பெறுகின்றதா? பாதாள உலகக் குழுக்களை ஒடுக்குவதற்காக அரசாங்கம் மறைமுகமாக இவ்வாறு செயற்படுகின்றதா என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளன.

எது எவ்வாறாயினும் ஒரு மனித உயிரை எவ்வித சலனமோ அல்லது அச்சமோ இல்லாது இவ்வாறு சுட்டுக்கொல்வது சாதாரண மக்கள் மத்தியில் பாரிய அச்சத்தை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இந்த சம்பவங்கள் கடந்த அரசாங்க காலத்தை விட சற்று அதிகரித்து இருப்பதால் மக்களின் பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுாப்பின் மீது சந்தேகத்தை ஏற்படுத்தியிருப்பதால் ஜனாதிபதியும் அரசாங்கமும் இதனை விட அதிக கவனம் செலுத்த வேண்டும் என மக்கள் அரசாங்கத்திடம் பகிரங்க கோரிக்கை முன்வைத்து வருகின்றனர்.

குற்றச்செயல்கள் அதிகரிப்பினால் திணறிக் கொண்டிருக்கும் பல நாடுகள் திட்டமிட்டு குற்றச்செயல்களை தடுப்பதற்காக கடும் நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்துள்ளன.

இலங்கையில் வன்முறைகள் அதிகரித்துவருவதால் ,லங்கையும் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய தேவை உருவாகியுள்ளது.

அதிகரித்துவரும் இந்த அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கு மறைமுக புலனாய்வாளர்களை பயன்படுத்துதல் மற்றும் இரகசிய நடவடிக்கைகள் அவசியமாக உள்ளதுடன், ஒரு குழுவால் மாத்திரம் இதற்கு தீர்வை காணமுடியாது.

இந்த குற்றகும்பல்களிற்கு எதிரான போராட்டத்திற்பு சட்டஅமுலாக்கல் அதிகாரிகளிடம் இருந்து அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு அவசியமாகும். முழுமையான ஒத்துழைப்பு கிடைக்காவிட்டால் குற்றவாளிகள் தொடர்ந்து செயற்படுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

குற்றவாளிகளை இலக்குவைத்து கடந்த அரசாங்கத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டயுக்திய நடவடிக்கை வெற்றியளித்ததாக அறிக்கைகள் தெரிவிக்கின்ற நிலையில், துப்பாக்கி சூட்டு சம்பவங்களிற்காக தேடப்பட்ட பல தனிநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

சில துப்பாக்கி பிரயோகங்களில் ஈடுபட்ட நபர் அல்லது சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டாலும் மூன்று நான்கு மாதங்களின் பின்னர் அவர்கள் விடுதலை செய்யப்படுவதால் அவர்கள் மீண்டும் குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றனர்.

உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் இந்த அச்சுறுத்தல்கள் தொடரும் என்பதோடு, கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடையும் வரை தடுத்துவைக்கப்பட்டிருப்பதை உறுதி செய்வதற்கான பொறிமுறைகள் அவசியம் என பாதுகாப்பு தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

போதைப்பொருள் குழுக்கள் மற்றும் பாதாள உலக குழுக்களை ஒழிப்பதாக தற்போதைய அரசாங்கம் உறுதியளித்துள்ள போதிலும், அதிகரித்து வரும் குற்றங்களை கட்டுப்படுத்துவதற்கு விசேட படையணிகள் தேவை என்பது தெளிவாகியுள்ளது.

## புதிய கூட்டுக்கள்...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சில சமயங்களில் தேர்தல் நோக்கு நிலையானது தேசத் திரட்சிக்கு எதிராக இருக்க முடியும்.

தேசியவாத அரசியல் என்பது ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசியக் கூட்டுணர்வின் அடிப்படையில் பெரிய திரளாகக் கூட்டிக்கட்டுவது.தன்னைத் தலைமை தாங்கும் சக்தியாகக் கருதும் தமிழரசுக் கட்சி அதற்குத் தேவையான வழி வரைபடத்தைக் கொண்டிருக்கின்றதா? இல்லை. முதலில் அவர்கள் தங்களை ஒரு உருகிப்பிணைந்த அமைப்பாகக் கட்டியெழுப்ப வேண்டும். தன்னை ஒரு கட்டிறுக்கமான கட்சியாகத் திரட்டமுடியாத ஒரு கட்சியானது எப்படி அரசற்ற, நாடற்ற ஒரு மக்களைத் தேசமாகக் கட்டியெழுப்ப முடியும்? இதுதானே கடந்த 15 ஆண்டுகளாக நடந்து வருகிறது?

தமிழரசுக் கட்சி, முன்னணி, புதிய கூட்டணி தவிர ஆங்காங்கே சுயேச்சைகளும் களமிறங்கும் வாய்ப்புக்கள் தெரிகின்றன.நாடாளுமன்றத் தேர்தலைப் போலன்றி உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சுயேச்சைகளுக்கு வெற்றி வாய்ப்புகள் அதிகமாக இருக்கலாம். தென்மாராட்சியில் ஒரு சுயேச்சைக் குழு அவ்வாறு களமிறங்கும் வாய்ப்புகள் தெரிகின்றன. வலிகாமத்திலும் சுயேச்சைக் குழுக்கள் இறங்க முடியும்.இதில் சுயேச்சையாக நிற்கக்கூடிய சில அரசியல்வாதிகளோடு சுமந்திரன் உரையாட முற்படுவதாக ஊர்ஜிதமற்ற ஒரு தகவல் உண்டு.

இப்படிப்பட்டதோர் பின்னணியில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நோக்கி உருவாகிவரும் புதிய கூட்டுக்கள் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் நோக்கத்தோடு உருவாக்கப்படவேண்டும்.

## உள்ளூராட்சி...

அறிவித்துள்ளது. அதன்படி, தேர்தலுக்கான கட்டுப்பணம் மார்ச் 3 ஆம் திகதி முதல் எதிர்வரும் 19 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து தேர்தலுக்கான வேட்புமனுக்கள் மார்ச் 17 முதல் மார்ச் 20 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை அந்தந்த மாவட்ட தெரிவத்தாட்சி அல்லது மாவட்ட செயலாளர் அலுவலம் அல்லது அரசாங்க அதிபர் அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதேவேளை, மே மாதம் முதல் வாரத்தில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்பட வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதற்கமைய, தேர்தலுக்கான திகதி குறித்து இந்த வாரத்திற்குள் இறுதி முடிவை எடுப்பதற்கு சிறப்புக் கூட்டம் நடத்தப்படும் என தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகளால் முன்வைக்கப்படும் அனைத்து பரிந்துரைகளையும் கணக்கில் எடுத்துக்கொள்வதுடன், ஒரு சுயாதீன அமைப்பாக, உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்திற்கு ஏற்ப தொடர்புடைய திகதி அறிவிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவாதம் முடியும் வரை வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வதை ஒத்திவைக்குமாறு எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டுக்கு முதலில் திட்டமிடப்பட்டிருந்த உள்ளாட்சித் தேர்தல், வேட்புமனுக்கள் ஏற்கனவே ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தமிழரசின்...

ஆராய விரும்பும் நீங்கள், தற்போது நாம் அமைத்துள்ள கூட்டணி உங்களுக்கு ஏமாற்றத்தையும் கவலையையும் அளிப்பதாகவும், உங்கள் கட்சிக்கு தனித்துப் போட்டியிடும் சூழலை உருவாக்கியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளீர்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபட்டு தேர்தல்களைச் சந்திக்கும் நிலை கடந்த 2023ம் ஆண்டு அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிப்பை அடுத்தே ஏற்பட்டது. தனித்துப் போட்டியிட்டு பின்னர் இணைந்து ஆட்சி அமைக்கும் எண்ணக்கருவை. தங்களது மத்திய குழு மட்டக்களப்பில் கூடி எடுத்தார்கள் இதன் மூலம் தமிழ் தேசிய கூட்டமைப்பை விட்டு தமிழரசுக் கட்சி வெளியேறியது. பிரிந்து நின்று செயற்படுவதால் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளை ஆணித்தரமாக நாம் முன்வைத்தபோதும் தமிழரசுக் கட்சியின் செயல் தலைவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மறைந்த சம்பந்தன் அண்ணரிடம் எமது நிலைப்பாட்டை நாம் நேரடியாக முன்வைத்தபோதும் கூட அவரும் தமிழரசுக் கட்சியின் முடிவினை ஏற்று செயற்படுமாறு எம்மை அறிவுறித்தினார்.

அன்று கூட்டமைப்பில் இருந்து தமிழரசுக் கட்சி வெளியேறிய பின்னர் நாமும் ரெலோ அமைப்பும் இயன்றவரையிலும் ஏனைய தமிழ் அமைப்புகளை ஐக்கியப்படுத்தி கூட்டமைப்பாக செயற்படும் நோக்கில் மேலும் மூன்று அரசியல் கட்சிகளை இணைத்து கூட்டமைப்பாக பயணிக்க தொடங்கினோம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினதும் அதன் அங்கத்துவக் கட்சிகளினதும் தொடர்ச்சியான பிளவுகளினால் ஏற்பட்ட மோசமான விளைவுகளை கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்க் கட்சிகளும் தமிழ் மக்களும் ஆழமாக உணர்ந்து கொண்டோம். மேலும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐந்து கட்சிகளாக இணைந்து ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியாக போட்டியிட்ட நாம், நடைபெற இருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியத்தின் இருப்புக்கு மிகவும் அவசியமான ஒற்றுமை எனும் விடயத்தை மேலும் வலுவானதாக்க சாத்தியமான வகையில் மேலும் சில அமைப்புகளை இணைத்துப் பயணிக்க தீர்மானித்து தொடர்ச்சியாக மேற்கொண்ட செயற்பாடுகளின் பலனாகவே இன்று பல கட்சிகள் இணைந்த கூட்டணியொன்றை உருவாக்க முடிந்துள்ளது.

நீங்கள் விரும்புவதுபோல, தமிழரசுக் கட்சியுடன் இக்கூட்டணியும் இணைந்து செயற்படுவதன் மூலம் தமிழ் தேசியத்திற்கு மேலும் வலுச்சேர்க்க வேண்டும் என்பதில் நாமும் பெரு விருப்பம் கொண்டுள்ளோம். எனவே எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் சம்பந்தமாக நடைமுறைச் சாத்தியமான வகையில் எமது கூட்டணியுடன் பேச்சுக்களை நடாத்தக் கூடிய தீர்மானம் ஒன்றை தமிழர சுக் கட்சியின் மத்திய குழு மேற்கொண்டு அறியத் தருவீர்களானால் அது பற்றி ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் நிறைவேற்றுக் குழுவில் பேசி சாதகமான பதிலை தங்களுக்கு அறியத் தரமுடியும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தமிழ்...

என்று தலைப்பிடப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. அதில் இக்கலந்துரையாடல் ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தங்களது கட்சிகளும் எமது கட்சியும் இணைந்து ஒன்றாகப் போட்டியிட்டது போல இந்தத் தேர்தலிலும் சில இடங்களிலாவது ஒன்றாகப் போட்டியிடுவது பற்றி ஆராய்வதற்கே ஆனது. இது சம்பந்தமாகக் கலந்துரையாட எதிர்வரும் 3ஆம் திகதியை செல்வம் அடைக்கலநாதன் உடன் நிர்ணயித்திருந்தோம்.

எனினும் அந்த முயற்சி இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போது தாங்கள் எமது கட்சியைத் தவிர்த்து வேறு ஒரு கூட்டணியை கடந்த 23 ஆம் திகதி உருவாக்கியமை ஏமாற்றம் அளிப்பதாகவும் கவலை அளிப்பதாகவும் அமைந்தது. இது எமக்கு தனித்துப் போட்டியிடும் சூழலை உருவாக்கியமை இயல்பானதும் தவிர்க்க முடியாததுமாகும்.

நாம் இந்த முயற்சியை மேற்கொண்டது தனிய தேர்தலுக்காக அல்ல. எமது முயற்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கிய இந்த நான்கு கட்சிகளும் தமிழினத்தின் நலன் கருதி மீண்டும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்ற நோக்கத்துடனே ஆகும் என்பதை மீண்டும் பதிவு செய்கிறேன். இந்த முயற்சியை மேலும் தொடரவே விரும்புகிறேன். இதற்கான தங்களது இணக்கம் இருக்குமானால் நாம் தொடர்ந்து பேசலாம்.

அதேநேரம் நாம் தனித்து போட்டியிட்டாலும் தேர்தலுக்குப் பின் இணைந்து வடக்கு - கிழக்கில் உள்ள சகல தமிழ் உள்ளூராட்சி மன்ற நிர்வாகங்களையும் நாம் கைப்பற்றும் முகமாக தேர்தலுக்குப் பின் செயற்படுவதற்கான உடன்பாடு ஒன்றை தேர்தலுக்கு முன்னரே ஏற்பாடு செய்தல். இதற்கும் தங்களது உடன்பாடு இருக்கும் என்றால் நாம் தொடர்ந்து பே-சலாம். தங்களது துரித பதிலுக்கு நன்றி உடையவராவோம் என்றுள்ளது.

## சமஷ்டி...

வலியுறுத்தியுள்ளார். கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, சமஷ்டி தீர்வை நோக்கி நகர் வதற்காகவே மக்கள் ஆணையை வழங்கி யுள்ளனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க 2015 தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை தயாரிக்கப்பட்ட ஒற்றையாட்சி அரசியலமைப்பைக் கொண்டுவரப்போவதாக அறிவித்திருந்த நிலையில், அதனை முற்றுமுழுதாக நிராகரிக்க வேண்டும் என்ற கோட்பாட்டை நாம் வலியுறுத்தியிருந்தோம்.

அத்துடன் கூட்டுப் பேச்சுவார்த்தை குறித்த தீர்மானத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி மறுபரிசீலனை செய்ய வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

## சட்டவிரோத...

நாட்டின் மீன்பிடித் துறைகளில் அதிக மீன்கள் உற்பத்தியாகும் கடற்பகுதியாக வடக்கு கடற்பகுதியே காணப்படுகிறது.

அப் பகுதியில் நடைபெறும் தென்னிந்திய மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடியை தடுத்து வடக்கு மீனவர்கள் சட்டப்படி சுதந்திரமாக மீன்பிடியில் ஈடவ்டுபடுவதை அரசாங்கம் உறுதி செய்யுமாக இருந்தால் உள்நாட்டிற்கு தேவையான மீன் உணவையும் ஏற்றுமதி செய்வதற்கான மீன்களையும் வடக்கு மீனவர்களால் ஏற்படுத்த முடியும். இதற்கு அநுர அரசாங்கம் தயாரா? அமைச்சர்கள் பொருளாதாரம் சரிகிறது என மக்களை அச்சுறுத்துவதை தவிர்த்து நடைமுறைச் செயற்பாடுகளில் இறங்குங்கள்.

சட்டவிரோத மீன்பிடி முறையை தென்னிந்திய மீனவர்கள் பயன்படுத்துவதால் வட கடலில் உள்ள சிறிய மீன் இனங்கள் மற்றும் மீன் உற்பத்தியாகும் சூழல் என்பன முற்றாக அழிக்கப்படுகிறது. இதனால் பெறுமதியான கடல் வளம் சூறையாடப்படுகிறது. இதனை அரசாங்கம் தடுத்து நிறுத்தும் செயற்பாட்டிற்கு இறங்க வேண்டும் இதன் மூலம் வடக்கில் மீன்படி துறையில் ஏற்படும் மாற்றம் நாட்டின் பொருளாதார உயர்ச்சியிலும் வலுச் சேர்க்கும் என குறிப்பிட்டுள்ளார்.

## தமிழீழ...

அறிவிப்பதாக பாதுகாப்பு அமைச்சின் வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தமிழர் புனர்வாழ்வு அமைப்பு, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, உலகத் தமிழர் இயக்கம், நாடு கடந்த தமிழீழ அரசு, உலக தமிழர் நிவாரண நிதியம், மற்றும் கனேடிய தமிழர் தேசிய அவை உள்ளிட்ட அமைப்புகள் தடை செய்யப்பட்ட அமைப்புக்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் தமிழ் இளைஞர் அமைப்பு, எக்சியூ என்று அறியப்படுகின்ற தலைமையகக் குழு, தேசிய தௌஹித் ஜமாத் அமைப்பு, ஜமாதே மிலாதே இப்ராஹிம் அமைப்பு, விலயாத் அஸ் செயிலானிடருள், ஆதர் அத்தபவிய, இலங்கை இஸ்லாமிய மாணவர் ஒன்றியம் மற்றும் சேவ் த பேர்ள்ஸ் என்பனவும் தடை செய்யப்பட்ட அமைப்புகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, குறித்த வர்த்தமானி அறிவித்தலில் 222 தனிநபர்களின் பெயர் விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## வடக்கு...

தெரிவித்துள்ளார். யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தியாவின் அத்துமீறிய இழுவைமடிப் படகுகளால் தொடர்ச்சியாக நாம் பாதிக்கப்பட்டு வருகின்றமை உண்மையே. ஆனால் சீனா எமக்கு உதவி செய்கிறோம் எனக் கூறி எமது கடல் பிராந்தியத்தில் இந்திய தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடும் வகையில் எம்மைப் பயன்படுத்த முனைவதை ஏற்கமாட்டோம். இந்தியா எமது அயல் நாடு. அது மாத்-திரமல்ல எமது தொப்புள்கொடி உறவு என்ற ரீதியில் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக எமது கடலைப் பயன்படுத்த அனுமதிக்கப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.















இப்பத்திரிகை 05.03.2025 அன்று இல.12/1 செங்குந்த அங்காடி, பருத்தித்துறை வீதி, யாழ். நல்லூர் பணிமனையில் உள்ள அகரவ் பப்ளிசிங் மீடியா பிறிண்டிங் ஹவுஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.